# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஐப்பசி 16 புதன்கிழமை (01-11-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:272

### பண்டாரவளையில் கொல்லப்பட்ட

## மற்றொருவரின் சடலம் பலாலி வந்து சேர்ந்தது!

### இன்று யாழ். எடுத்துவரப்படும்

யாழ்ப்பாணம்,நவ.1

பண்டாரவளை விந்துனுவெவ புனர்வாழ்வுத் தடுப்பு முகாமில் இடம்பெற்ற சம்பவத்தின்போது உயிரிழந்த மற்றும் ஒருவரின் சடலம் நேற்று விமானத்தில் கொண்டுவரப்பட்டு பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

### கைகளையும் வாய்களையும் கட்டியவாறு

## நிமலராஜன் கொலையைக் கண்டித்து யாழ்நகரில் இன்று காலை ஆர்ப்பாட்டம்!

### எழுதுகோலை கீழே வைத்து அஞ்சலி செலுத்த வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,நவ.1

குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, உண்மையை வெளிப்படுத்தும் தமது கடமையைச் செய்வதற்காக தன்னுயிர் ஈந்த பத்திரிகையாளர் நிமலராஜனின் படுகொலையைக் கண்டித்து இன்று காலை 10.30 மணிக்கு யாழ். பஸ்நிலையம்முன்பாக அமைதிஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தினால் நடத்தப்படும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொள்பவர்கள் தமது வாய்களை கறுப்புத்துணியால் மூடிக்கட்டியும் கைகளைக் கட்டியும் அமைதிப் போராட்டத்தில் ஈடுபடுவர்.

இன்று காலை10.30மணி தொடக்கம் பகல் 12.30 மணிவரை நடைபெறும் இந்தப் போராட்டத்தில் பங்குபற்றுவோர் கண்டனப் பதாகைகளையும் தாங்கி நிற்பார்கள்.

இதேவேளை சகல தரப்பினரையும் தத்தமது இடங்கள், அலுவல

(10ஆம் பக்கம் பார்க்க)



### 1983 கறுப்பு ஜூலை போன்ற

## இனக்கலவரத்துக்கு நான் ஒருபோதும் இடமளியேன்!



## நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரை

கொழும்பு,நவம்பர்1

**1983ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலைக் காலத்தில் இடம்பெற்றது போன்ற பெரும் இனக்கலவரம் எதற்கும் நான் இடமளிக்கப் போவதில்லை. அதற்கேற்ற விதத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் இறுக்கப்படும்.**

**இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாட்டு மக்களுக்கு நேற்று ஆற்றிய உரையின் போது உறுதியளித்தார்.**

**இனவாதக் குழுக்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டாம் என்றும் அவர் சிங்கள மக்களைக் கேட்டுக் கொண்டார்**

பண்டாரவளைத் தடுப்பு முகாம் படுகொலை மற்றும் அதனைத் தொடர்ந்து மலையகப் பகுதிகளில் மூண்டுள்ள இனக்கலவரம் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வானொலியில் நேற்று மாலை நாட்டு மக்களுக்கு உரை நிகழ்த்தினார்.

சிங்களம், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளில் மட்டுமே ஜனாதி

(10ஆம் பக்கம் பார்க்க)

### சந்திரசேகரன் தொடர்ந்து விசாரணை

கொழும்பு,நவ.1

...லவாக்கொல்லைச் சம்பவங்களை ...து விசாரணைக்கென அழைத் ...செல்லப்பட்ட மலையக மக்கள் ...ணியின் தலைவரும், எம்.பியு ...பெ.சந்திரசேகரன் தொடர்ந்தும்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ...லையகத்தில் நேற்று ஓரளவு அமைதி ...ப்படையினரும் ரோந்து நடவடிக்கை

கொழும்பு,நவ.1

...இரண்டு நாள்களாக இடம்பெற்ற ...ம்பாவித சம்பவங்களின் பின்னர் ...ரெலியா, கினிகத்தேனை, பொக ...தலாவை, தலவாக்கொல்லை, ...டன் ஆகிய பகுதிகளில் நேற்று ...வு அமைதி நிலவியது.

...பொலீஸாரும், இராணுவத்தின ...கடற்படையினரும் தொடர்ந்து ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். நுவரெலியாவில் நேற்று இரவு அமுலுக்கு வந்த ஊரடங்கு நேற்றுப் பகலும் நீடிக்கப்பட்டது.

தலவாக்கொல்லையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக இதுவரை தமிழர்களின் 30 கடைகள் தீ வைத்து எரிக்கப்பட்டன. இவற்றில் 5 கடைகள் நகைக் கடைகள். இந்தக் கடைகளில் இருந்து நகைகள் கொள்ளையடிக்கப்பட்ட பின்பே கடைகள் எரிக்கப்பட்டன.(இ)

### சரசாலை எழுதுமட்டுவாழ் பகுதிகளில் தாக்குதல்

கொழும்பு,நவ.1

சரசாலை தெற்கு மற்றும் எழுதுமட்டுவாழ் பகுதிகளில் உள்ள படையினரின் முன்னரங்க நிலைகள் மீது விடுதலைப் புலிகள் நேற்றுமுன்தினம் மோட்டார்த் தாக்குதல் நடத்தினர் எனவும் -

(10ஆம் பக்கம் பார்க்க)

## ...டு முழுவதும் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு,நவ.1

...லையகப் பகுதிகளில் நிலவும் ...நிலைமையைத் தொடர்ந்து நாடு ...தும் பாதுகாப்பு ஏற்பாடுகள் ...படுத்தப்பட்டுள்ளன என்று ...ப்பு அமைச்சுத் தெரிவித்துள்...

...தை அடுத்து கொழும்பு நக ...பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப் ...ப்பட்டுள்ளன. பொலீஸாருடன் முப்படையினரும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர்.

மலையகப் பகுதிகளில் இடம்பெற்றுள்ள அசம்பாவிதங்களைக் காரணம் காட்டி நாட்டில் இனக்கலவரத்தைத் தூண்டிவிட முயற்சிக்கும் சக்திகளைக் கட்டுப்படுத்தவே இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-8)

**நிமலராஜன் குடும்பத்தின் நலன்காக்கும் நிதிப் பட்டியல் 9ஆம் பக்கத்தில் ★**

## 50 ஆயிரம் தோட்டத் தொழிலாளர் நேற்று கடமைக்குச் செல்லவில்லை

கொழும்பு,நவ.1

மலையகத்தில் கடந்த சில நாள்களாக இடம்பெற்றுவரும் அசம்பாவிதங்களைத் தொடர்ந்து நுவரெலியா மாவட்டத்தில் மாத்திரம் 50 ஆயிரம் தோட்டத் தொழிலாளர்கள் நேற்று வேலைக்குச் செல்லவில்லை.

களனிவெளி பிளான்டேசன் பகுதிகளில் உள்ள தோட்டங்களே கலவரத்தினால் பெரும் அளவு பாதிக்கப்பட்டுள்ளன.

இங்கு பாடசாலைகள், அரச அலுவலகங்கள், வர்த்தக நிலையங்கள் நேற்று இயங்கவில்லை. திறந்திருந்த சில வர்த்தக நிறுவனங்களும் நேற்றுப் பகல் 12 மணியுடன் மூடப்பட்டன. (இ)

## தலவாக்கொல்லைப் பகுதியில் 300 தமிழர் ஆலயத்தில் தஞ்சம்

கொழும்பு,நவ.1

தலவாக்கொல்லையில் 300 தமிழர்கள் ஸ்ரீ வேலாயுத சுவாமி ஆலயத்தில் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களது வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. கோயிலில் தஞ்சமடைந்துள்ள இவர்களுக்கு இதுவரை எந்தவித நிவாரண உதவியும் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

பொலீஸார் நேற்று தலவாக்கொல்லை நகருக்கு வந்து சேதமடைந்த கடைகள் பற்றிய விவரங்களைச் சேகரித்தனர்.

கினிகத்தேனையில் 20 கடைகள்வரை எரிக்கப்பட்டுள்ளன. கடை உரிமையாளர்கள் நாவலப்பிட்டி, வட்டக்கொட ஆகிய பகுதிகளுக்கு இடம்பெயர்ந்துள்ளனர்.

அதேசமயம் நேற்று அட்டன், டிக்கோயாப் பகுதிகளில் உள்ள தோட்டங்களுக்குள் புகுந்த சுமார் 50 சீருடையினர் அங்கு தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அட்டன் சந்தைக் கட்டடத்தை நோக்கி நேற்று பெற்றோல் குண்டு ஒன்றும் வீசப்பட்டது.

(இ)

## ஈ.பி.டி.பி. வாகனம் மீது யாழ்நகரில் கிரனேட் வீச்சு!

### இரவுச் சம்பவத்தில் இருவருக்குக் காயம்

யாழ்ப்பாணம்,நவ.1

நேற்று இரவு யாழ்நகர்ப் பகுதியில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் ஈ.பி.டி.பி. அமைப்பினரின் "பிக் அப்" வாகனம் ஒன்று சிறு சேதம் அடைந்தது. அந்த வாகனத்தில் இருந்த இரண்டரை வயதுச் சிறுவன் ஒருவரும் வாகனத்தைச் செலுத்திச் சென்ற அவரது தந்தை

(10ஆம் பக்கம் பார்க்க)

# அரசாங்க அறிவித்தல்

## தேருநர் பதிவேடுகள் திருத்தம் - 2000

(1) 1980ஆம் ஆண்டின் 44ஆம் இலக்க தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 12 (1) ஆம் பிரிவின்படி 2000ஆம் ஆண்டுக்குரிய தேருநர் பதிவேடுகளின் திருத்தம் ஆரம்பமாகிவிட்டது என்று இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது.

(2) தற்சமயம் நடைமுறையிலிருக்கும் தேருநர் பதிவேடுகளின் பிரதிகள் அல்லது அவற்றின் பாகங்கள் பதியும் அலுவலர்களால் கீழ்க்காணும் அலுவலகங்களில் பார்வைக்கு வைக்கப்படும்.

| *பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அலுவலகங்கள்.* | *பார்வைக்கு வைக்கப்படும் பதிவேடுகள் அல்லது அவற்றின் பாகங்கள்.* |
|---|---|
| 2. 1. மாவட்டத் தேர்தல்கள அலுவலகம். | அரசாங்க அதிபர் அம்மாவட்டத்திற்குப் பதியும் அலுவலராயிருக்கும் அந்தத் தேர்தல் மாவட்டங்களுக்கான பூரணமான தேருநர் பதிவேட்டுப் பிரதி. |
| 2. 2. பிரதேச செயலகம். | பிரதேச செயலகப் பிரிவு அடங்கிய பகுதியிலுள்ள தேருநர் பெயர்களடங்கிய பதிவேட்டின் பாகங்கள். |

(3) ஏதாவதொரு தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராயிருக்கத் தகுதியுள்ள ஒவ்வொருவரும் தமது பெயர் தேருநர் பதிவேட்டில் பதியப்பட்டிருக்கிறதாஎன்று மேலே குறிப்பிடப்பட்ட தேர்தல்கள் அலுவலகத்தில் உள்ள தேருநர் பதிவேட்டை அல்லது பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள குறிப்பிட்ட பாகத்தைப் பரிசீலனை செய்வதன் மூலம் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம்.

(4) தேருநர் பதிவேட்டை அல்லது அதன் பொருத்தமான பாகத்தைப் பரிசீலனை செய்து தமது பெயர் அவ்விடாப்பில் பதியப்படவில்லை எனக் காணும் ஒவ்வொருவரும் 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01ஆம் திகதி 18 அல்லது அதற்கு மேற்பட்ட வயதினர் ஒவ்வொருவரும் அதில் தமது பெயரை கீழ்க்காணும் முறையில் இடுவித்துக்கொள்ளலாம்.

4. 1. இவ்வறிவித்தலோடு இணைக்கப்பட்டிருக்கும் இணைப்படிவத்தில் 2000ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15 ஆம் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னரோ பொருத்தமான தேர்தல் மாவட்டத்தின் பதியும் அலுவலருக்கு தங்கள் பகுதிக் கிராம உத்தியோகத்தர் ஊடாக எழுத்து மூலம் ஒரு விண்ணப்பத்தினைச் செய்யலாம். இதற்கான விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

4. 2. பதியப்படுவதற்கான தகைமை பற்றி எல்லாத் தகவல்களையும் கிராம உத்தியோகத்தரினால் தமக்குக் கொடுக்கப்பட்ட விசேட பத்திரம் எதிலும் கொடுத்தும், கிராம உத்தியோகத்தரினால் கேட்கப்படும் ஏனைய விவரங்களைக் கொடுத்தும் இவ் விண்ணப்பப் பத்திரத்தை உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தரின் அலுவலகத்தில் கையளிக்கவும்.

(5) உங்களினால் கையளிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரத்தை, உங்கள் பிரிவின் கிராம உத்தியோகத்தர், தனது சிபார்சுடன் பதிவு அலுவலருக்கு அனுப்பி வைப்பார்.

*பதிவு அலுவலர்.*
*தேர்தல் மாவட்ட இல. 10. யாழ்ப்பாணம்.*

*செயலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2000 ஒக்ரோபர் மாதம் 31ஆம் திகதி.*

---

### ஒரு தேருநராகப் பதியப்படுவதற்கான

# விண்ணப்பப் பத்திரம் - 2000

(1) ................................ பிரிவு கிராம உத்தியோகத்தர் ஊடாக பதியும் அலுவலர், தேர்தல் அலுவலகம், யாழ்ப்பாணம்.

.............................................. ஆகிய நான் யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் ஒரு தேருநராக பதிவு செய்துகொள்ள இத்தால் விண்ணப்பித்துக்கொள்கிறேன்.

(2) எனது விண்ணப்பத்தின் சார்பாக கீழ்க்காணும் விவரங்கள் தரப்படுகின்றன.

2.1. முழுப்பெயர்:

..................................................

2.2. முகவரி:

..................................................

..................................................

2.3. பிறந்த திகதியும் வயதும்:

..................................................

..................................................

2.4. 2000ஆம் ஆண்டு ஜூன் மாதம் 01 ஆம் திகதி மேற்படி முகவரியில் சாதாரண குடியிருப்பாளரா?

..................................................

2.5. பால்: ..................................................

2.6. இனம்: ..................................................

2.7. பதிவு மூலம் இலங்கைப் பிரஜையாயின் பிரஜாவுரிமைப் பத்திர இலக்கத்தினைக் குறிப்பிடுக.

..................................................

2.8. தேசிய அடையாள அட்டை அல்லது விசேட அடையாள அட்டை இலக்கம்:

..................................................

2.9. கிராம உத்தியோகத்தரின் பிரிவு:

..................................................

..................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி:..................

---

# கிராம உத்தியோகத்தரின் அறிக்கை

சிபார்சு செய்யப்படுகின்றது / செய்யப்படவில்லை.

சிபார்சு செய்வதாயின் பின்வரும் விவரங்களை கிராம உத்தியோகத்தர் பூர்த்தி செய்தல் வேண்டும்.

வாக்கெடுப்புப் பிரிவு:

..................................................

வாக்கெடுப்பு மாவட்ட இலக்கம் :..................................

வீட்டு இலக்கம் :..................................

கிராமம் / வீதி :..................................

..................................................

கிராம உத்தியோகத்தரின் கையொப்பமும் பிரிவின் இலக்கமும்

திகதி :.................. (C/13646)


# மக்ஷல் கவுஸ்

மற்றும் ஒரு தொகுதிப் படங்கள் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன. கறுப்பு வெள்ளைப் படச்சுருள்கள், பேப்பர்களும் வந்துள்ளன.

20, யுபிலி பஜார், யாழ்ப்பாணம்.

Tel: 2008 / 2137 (80092)



# KANNAN COMPUTER TRAINING CENTER

## கண்ணன் கொம்பியூட்டர் பயிற்சி நிலையம்

வலிகாமம் மாணவர்களின் நன்மை கருதி புதியதோர் கணனி நிலையத்தை ஆரம்பிக்க உள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மிகக் குறைந்த கட்டணத்தில், அனுபவம் வாய்ந்த பயிற்றுவிப்பாளரால், கூடியளவு செய்முறை நேரத்துடன், Pendium III Multimedia Computers மூலம் ஆரம்பிக்கப்படுகிறது.

### எமது பயிற்சி நெறிகள்:

**DIPLOMA IN MICROSOFT OFFICE 2000** Duration :- 4 Months

- MS Word 2000
- Ms Access 2000
- MS Excel 2000
- MS Powerpoint 2000

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING** Duration :-8 Months

- Pascal
- Visual Basic 6.0
- Ms Excel 2000
- c/c++
- Windows 98/2000

**CERTIFICATE COURSES**

- MS Excel 2000
- MS Word 2000
- MS Access 2000
- MS Powerpoint 2000
- Visual Basic 2000
- Pascal
- dbase III+
- C/C++
- Auto Cad 14

தொடர்புகளுக்கு:

**கண்ணன் கடை(சந்திரன் பான்சி பலஸ்),**

நவாலி றோட், ஆனைக்கோட்டை. T.P : 2758 (80083)





# கௌரி தொலைத்தொடர்பு சேவையின் கிளை நிறுவனம்

## கபிலன் தொலைத் தொடர்பு சேவை

# KAPILAN COMMUNICATION

இடம்: கே.கே.எஸ் வீதி, றொட்டியாலடி, மருதனார்மடம்

காலம்: இன்று (01-11-2000) புதன்கிழமை. உள்ளூர்:070-212718, வெளியூர்: 009470-212718

**வாடிக்கையாளர்களின் கவனத்திற்கு!**

**தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்ட எமது சேவை மீண்டும் ஆரம்பமாகிறது**

| | | | |
|---|---|---|---|
| உள்ளூர் அழைப்புக்கு நிமிடத்துக்கு | - 8/- | வெளியிலிருந்து வரும் அழைப்புக்கு நிமிடத்திற்கு | - 5/- |
| வெளிநாட்டுத் தொடர்புக்கு நிமிடத்திற்கு | - 120/- | ஞாயிற்றுக்கிழமை (வெளிநாடு) மட்டும் | - 100/- |
| இந்தியாவுக்கு நிமிடத்திற்கு | - 80/- | | |
| ஞாயிறு (இந்தியா) மட்டும் | - 60/- | | |

தினமும் இரவு பகல் சேவை. எமது சேவை நிரந்தரம்!

தனிரகம்!!

- உரிமையாளர்.

(C/13641)


## கொடிகாமத்தில் ஷெல்கள் வீழ்ந்தன

தென்மராட்சி,நவ.1

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் காலை ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

இராமாவில், நாவலடி போன்ற இடங்களில் தொடர்ச்சியாக ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

நாவலடிப் பகுதியில் வெடித்த ஷெல்களின் சிதறல்கள் கொடிகாமம் சந்தைப் பகுதியில் வீழ்ந்ததால் அப்பகுதியில் பதற்றம் ஏற்பட்டது.

நாவலடி, இராமாவில் பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறியதால் பாதிப்பு ஏற்படவில்லை.

(ஐ-117)

## உதைபந்தாட்டப் போட்டிகள்

வலி.வடக்கு,நவ.1

வலிகாமம் கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோட்டங்களிடையே தெரிவு செய்யப்பட்ட பாடசாலை அணிகள் பங்குபற்றும் உதைபந்தாட்டப் போட்டியின் மூன்றாம் இடங்களுக்கான ஆட்டங்கள் இன்று புதன்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகள் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக்கல்லூரி.

**18 வயதுப்பிரிவு**

புனித ஹென்றியரசர் கல்லூரி எதிர் மல்லாகம் மகா வித்தியாலயம்.

* * *

வலிகாமம் கல்வி வலய கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலை அணிகளிடையேயான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நாளை (2/11/2000) வியாழக்கிழமை ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

**16 வயதுப் பிரிவு**

ஸ்கந்தவரோதயக் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி.

யூனியன் கல்லூரி எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி.

(ஐ-86)


**நாகம்ஸ்** சுன்னாகம்

இன்று முதல் குதூகல ஆரம்பம்

அஜித் (இரு வேடம்), சிம்ரன், விவேக் நடித்த

**வாலி**

(ரீல்ஸ்) காட்சிகள்- 11.00, 2.30 (பி.நே) (80090)

**ராஜா** யாழ்ப்பாணம்

விஜய், ஜோதிகா, விஜயகுமார் மற்றும் பலரின் நடிப்பில்

**குஷி**

காட்சிகள்:10.30, 2.00 (பி.நே.) 06.11.2000 தொடக்கம்

**பூமகள் ஊர்வலம்**



கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களுக்கான தலைமைத்துவக் கருத்தரங்கு அண்மையில் வலி. தெற்கு பிரதேசசெயலர் பிரிவில் நடைபெற்றது. கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற இக்கருத்தரங்கை பிரதேசசெயலர் ஆ.மகாலிங்கம் ஆரம்பித்து வைத்து உரையாற்றுவதையும் - கருத்தரங்கில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (ஐ)

# காங்கேசன் சிமெந்து ஊழியர்களுக்கு இடர்காலக் கொடுப்பனவு கிடைக்கும்!

யாழ்ப்பாணம்,நவ.1

காங்கேசன்துறை சிமெந்துக கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு விரைவில் இடர்காலக் கொடுப்பனவு கிடைக்கவிருக்கிறது.

சிமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்கள், தொழிலாளர்கள் அங்கம் வகிக்கும் இணைப்புக்குழுவின் பிரதிநிதிகளுக்கும் வடக்குப் புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது இடர்காலக் கொடுப்பனவு குறித்து ஆராயப்பட்டது.

1996ஆம் ஆண்டு முதல் வழங்கப்படவேண்டிய இடர்காலக் கொடுப்பனவைப் பெறுவதற்கு உதவுமாறு குழுவினர் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்ட டக்ளஸ் விரைவில் இந்தக் கொடுப்பனவு கிடைக்க ஏற்பாடு செய்வதாக உறுதி அளித்தார்.

# படுகொலைகளைக் கண்டித்து பிரதேச சபையில் தீர்மானம்

வேலணை,நவ.1

பண்டாரவளை, விந்துணுவெவ புனர்வாழ்வு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ்க் கைதிகள் குரூரத்தனமாக சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், இப்படுகொலைகளுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்களுக்கு அதி உச்ச தண்டனை வழங்க வேண்டும் எனக் கோரியும் வேலணைப் பிரதேச சபையின் மாதாந்தக் கூட்டத்தில தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்தவாரம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் பிரதேச சபைத தலைவர் ந.கருணாகரகுருமூர்த்தி கொண்டுவந்த இப்பிரேரணை சபையோரால் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இப்பிரேரணையினைச சமர்ப்பித்து பிரதேச சபைத்தலைவர் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

பண்டாரவளை, விந்துணுவெவ புனர்வாழ்வு முகாமில் 29 உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்பட்டுள்ளன. சிங்கள பௌத்த பேரினவாத வெறியைத் தூண்டும் சக்திகள் மிகவும் குரூரத்தனமாக தமிழர்களின் உயிரைப் பறித்துள்ளன. இந்த முகாமில் படை நடவடிக்கையின்போது கைதானவர்களும், சரணடைந்தவர்களுமென முழுமையாக நிராயுதபாணிகள்தான் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இப்படுகொலை வன்மையாகக் கண்டிக்கப்படவேண்டியது. இனியும் இத்தகைய சம்பவங்கள் தொடர்வதை அனுமதிக்கக்கூடாது. எனவே இப்படுகொலைக்கு எதிரான உணர்வுகளை ஒவ்வொருவரும் வெளிப்படுத்துவது மிகவும் அவசியமாகும் - என்று தெரிவித்தார்.

இத்தீர்மானம் ஜனாதிபதிக்கும் மற்றும் மனிதநேய அமைப்புகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ஐ-167)

### சட்ட விரோத மின் பாவனை

அரியாலை,நவ.1

கோப்பாய், நீர்வேலி பகுதிகளில் சட்டவிரோதமாக மின்சாரம் பெறும் நடவடிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தப் பகுதிகளில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்று வந்த சிலரின் மின் இணைப்புகள் இலங்கை மின்சார சபை ஊழியர்களால் கண்டு பிடிக்கப்பட்டு அகற்றப்பட்டன.

சட்ட விரோத மின் பாவனையால் அடிக்கடி மின் துண்டிப்பு ஏற்படுவதுடன்மின்சாரம் வலுக்குறைந்து காணப்படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ஐ-117)

# வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,நவ.1

குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்குச் செல்ல பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாக வருமாறு:-

**சங்கானை**

513/147069/B 513/151845/A
513/158597/A 513/158597/B
513/158597/C 513/158597/D
513/158597/E 513/165699/A
513/165699/B 513/165699/C
513/165699/D 513/165785/A
513/165836/A

**சாவகச்சேரி**

511/162567/A 511/162567/B

**யாழ்ப்பாணம்**

512/128754/A 512/159005/A
512/159005/B 512/161302/A
512/161302/B 512/161302/C
512/163269/A 512/163269/B
512/163426/A 512/163426/B
512/163456/A 512/163456/B
512/163456/C 512/163456/D
512/163456/E 512/163456/F
512/163456/G 512/163464/A
512/163465/A 512/163610/A
512/166078/A 512/166078/B
512/166078/C 512/166079/A
512/166082/A 512/166082/B
512/166093/A 512/166131/A
512/166132/A 512/166144/A
512/166145/A 512/166145/B
512/166151/A 512/166154/A
512/166154/B 512/166239/A
512/166266/A 512/166266/B
512/168445/A

**கோப்பாய்**

511/136598/A 511/136598/B
511/149196/A 511/149196/B
511/149645/A 511/149645/B
511/149700/A 511/149700/B
511/149738/A 511/149760/A
511/149760/B 511/154330/A
511/154493/A 511/154493/B
511/154547/A 511/159548/A
511/159548/B 511/159718/A
511/159759/A 511/159759/B
511/159772/A 511/159772/B
511/159778/A 511/159778/B
511/159778/C 511/159802/A
511/159802/B 511/159807/A
511/159807/B 511/159836/A
511/159860/A 511/159860/B
511/159860/C 511/159869/A
511/162548/A 511/162548/B
511/162555/A 511/162568/A
511/162576/A 511/162576/B
511/162630/A 511/162663/A
511/162670/A 511/162670/B
511/162671/A 511/162671/B
511/162697/A 511/162697/B
511/162699/A 511/162699/B
511/162720/A 511/162721/A
511/162721/B 511/162731/A
511/163645/A 511/163653/A
511/163654/A 511/163654/B
511/163655/A 511/163656/A
511/163656/B 511/163673/A
511/167001/A 511/167001/B
511/167001/C 511/167009/A
511/167009/B 511/167023/A
511/167023/B 511/167023/C
511/167023/D 511/167028/A
511/167028/B 511/167028/C
511/167032/A 511/167032/B
511/167033/A 511/167033/B
511/167034/A 511/167034/B
511/167035/A 511/167035/B
511/167035/C 511/167035/D
511/167041/A 511/167041/B
511/167042/A 511/167042/B
511/167043/A 511/167043/B
511/167043/C 511/167056/A
511/167056/B 511/167056/C
511/167062/A 511/167062/B
511/167062/C 511/167062/D
512/166099/A 512/166099/B

**நல்லூர்**

511/156992/A 511/156992/B
511/156992/C 512/150067/A
512/150067/B 512/150067/C
512/152984/A 512/152984/B
512/152984/C 512/152984/D
512/152984/E 512/161179/A
512/161179/B 512/161430/A
512/161430/B 512/161430/C
512/163575/A 512/163616/A
512/163617/A 512/163617/B
512/166137/A 512/166137/B
512/166137/C 512/166137/D
513/155137/A 513/155137/B
513/155179/A 513/155179/B
513/155179/C 513/156033/A
513/156033/B 513/156033/C
513/164306/A 513/164306/B
513/164306/C 513/164307/A
513/164307/B 513/164307/C
513/164307/D 513/164333/A
513/165921/A 513/165921/B
513/165921/C 513/166748/A

**சண்டிலிப்பாய்**

513/143844/ 513/143844/B
513/143844/ 513/151912/A
513/160659/A 513/160659/B
513/160659/C 513/160659/D
513/161843/A 513/164060/A
513/164280/A 513/164280/B
513/165524/A 513/165633/A
513/165821/A 513/165821/B
513/165821/C 513/165821/D
513/165829/A 513/165887/A
513/165887/B 513/165890/A
513/165890/B 513/166465/A
513/166465/B 513/166465/C
513/166465/D 513/166465/E
513/166658/A 513/166838/A
513/166860/A 513/166860/B

**தெல்லிப்பழை**

513/163926/A 513/164216/A
513/165653/A 513/165653/B
513/165746/A 513/166519/A
513/166519/B 513/166750/A

**உடுவில்**

513/147069/A 513/147069/C
513/150343/A 513/161687/A
513/161688/A 513/161808/A
513/161808/B 513/163959/A
513/163959/B 513/165549/A
513/165549/B 513/165651/A
513/165651/B 513/165651/C
513/165651/D 513/165710/A
513/165710/B 513/165710/C
513/165716/A 513/165783/A
513/165805/A 513/165805/B
513/165805/C 513/165805/D
513/165841/A 513/165853/A
513/165906/A 513/165906/B
513/165906/C 513/165906/D
513/166513/A 513/166526/A
513/166526/B 513/166667/A
513/166736/A 513/166736/B
513/166736/C 513/166736/D
513/166788/A 513/166903/A

இலங்கை அரசு மேற்கொள்ளும்

# சமாதான முயற்சிகள் அனைத்தும் கண்துடைப்பு!

## கோபாலசாமி குற்றச்சாட்டு

புதுடில்லி,நவ.1

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மேற்கொண்டுவரும் சமாதான முயற்சிகள் எல்லாம் உலக நாடுகளை ஏமாற்றுவதாகவும், தமிழர்கள் மீதான படுகொலைகளில் இருந்து கவனத்தைத் திசை திருப்புவனவாகவுமே அமைகின்றன.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலர் வை.கோபாலசாமி இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மதுரையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் பண்டாரவளைத் தடுப்பு முகாமில் இடம்பெற்ற தமிழர்கள் மீதான மூர்க்கத்தனமான படுகொலைச் சம்பவம், இலங்கைத் தமிழர்கள் மீதும் விடுதலைப் புலிகள் மீதும் ம.தி.மு.க கொண்டுள்ள நிலைப்பாட்டை மேலும் வலுவாக்கியுள்ளது.

தமிழீழம் என்ற தனிநாடே தமிழர்களுக்கு - என்றுமே நிம்மதியான வாழ்வுக்கு ஒரே வழி - என்றார். (ஐ-8-5)

# படையினருடன் ஒத்துழைத்து அமைதியைப் பேணுங்கள்!

## நாட்டு மக்களுக்கு ரணில் செய்தி

கொழும்பு,நவ.1

நாட்டில் அமைதியையும், சமாதானத்தையும் பேண, பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ள இராணுவத்தினருக்கும் பொலீஸாருக்கும் முழு ஒத்துழைப்பை வழங்குமாறு ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களைக் கேட்டுள்ளார்.

ரணில் விக்கிரமசிங்க விடுத்த ஒரு விசேட அறிக்கையில் இவ்வாறு கேட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

பண்டாரவளைத் தடுப்பு முகாமில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தை அடுத்து தலவாக்கொல்லை, நுவரெலியாப் பிரதேசங்களில் சில வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இராணுவத்தினரும் பொலீஸாரும் அவற்றைக் கட்டுப்படுத்துவதில் ஈடுபட்டுவருகின்றனர். ஆகவே மக்கள் அனைவரும் அரசியல் பேதங்களை மறந்து நாட்டின் சட்ட விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவற்றைப் பேணி வரும் படையினருக்கும் பொலீஸாருக்கும் ஒத்துழைப்பு வழங்கி அமைதி நிலையைப் பேண வேண்டும். இவ்வாறு ரணில் தெரிவித்துள்ளார்.

கேகாலை நகரில் இடம்பெற்ற

# விபத்தில் காயமடைந்த இருவர் உயிரிழப்பு!

கடந்த வெள்ளியன்று கேகாலை - கண்டி வீதியில் இடம்பெற்ற கோர வாகன விபத்தில் காயமடைந்து கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். இந்த இருவருடன் சேர்த்து இந்த விபத்தில் பலியானோரின் எண்ணிக்கை 5ஆக உயர்ந்துள்ளது.

விபத்து நடந்த அன்று வைத்தியசாலையில் மரணமடைந்த திருமதி கனகசபை ஈஸ்வரிதேவியின் பிள்ளைகளான கனகசபை உதயகுமார் (வயது 32) என்பவர் கடந்த சனிக்கிழமையும் -

ஹாட்லிக் கல்லூரி மாணவன் கனகசபை செந்தூரன் (வயது 15) என்பவர் ஞாயிறன்று பிற்பகல் ஒரு மணியளவிலும் உயிரிழந்துள்ளனர்.

இதே குடும்பத்தைச் சேர்ந்த கனகசபை அனுஷியா (வயது 22) கனகசபை நிசாந்தி (வயது 17) ஆகியோர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# நாவலப்பிட்டி வரையுமே மலையக ரயில் சேவை

கொழும்பு,நவ.1

மலையகத்தில் நேற்று முன்தினம் நாவலப்பிட்டி வரை மட்டுமே ரயில் சேவைகள் இடம்பெற்றன.

அங்கு நிலவும் பதற்றநிலை காரணமாக வழமையான சேவைகளை மேற்கொள்ள முடியாமல் உள்ளதாகவும்-

பதுளை வரையான ரயில் பாதைகள் தற்போது சரிபார்க்கப்படுகின்றன என்றும் - அதை அடுத்து சேவைகள் வழமை நிலைக்குத் திரும்பும் எனவும்-

ரயில்வே உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-8)

# தாக்கப்பட்டு மண்ணில் புதைக்கப்பட்டாராம்!

தீபாவளி தினத்தன்று ரெலோ அமைப்பினரால் - தாக்கப்பட்டு மண்ணில் புதைக்கப்பட்டதாகக் கூறப்படும் ஒருவர் மீட்கப்பட்டு மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது-

தீபாவளித் தினத்தன்று இரவு 7 மணியளவில் வீதியால் சென்ற தாமோதரம் சுகேந்திரன்(வயது27) என்ற இளைஞரை ஆரையம்பதியில் அமைந்துள்ள ரெலோ அலுவலகத்தினர் வழிமறித்தனர் என்றும் -

சிகரெட் வாங்கி வருமபடி அந்த இளைஞர் கேட்கப்பட்டார் என்றும்- 'கடைகள் பூட்டப்பட்டுள்ளதால் சிகரெட் வாங்கிவர முடியாது' என்று அந்த இளைஞர் தெரிவித்தார் என்றும் - கூறப்படுகிறது. இதையடுத்து அந்த இளைஞனை அவர்கள் தாக்கினார் என்றும் -

மயக்கமடைந்த அந்த இளைஞனை கிடங்கு ஒன்றில் போட்டு மண்ணால் மூடினர் என்றும் - அன்றிரவு 11 மணியளவில் அந்தவழியால் வந்த ஒருவர் முனகல் சத்தம் கேட்டு அருகே சென்று பார்த்து அந்த இளைஞனை மீட்டு மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதித்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது

மயங்கிய நிலையில் ஐந்து தினங்கள் இருந்த அந்த இளைஞன் நேற்று முன்தினம் மயக்கம் ஓரளவு தெளிந்து நடந்த சம்பவத்தை தெரிவித்தாராம்.

இந்தச்சம்பவம் தொடர்பாக பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது (இ-3-21)

### முதியோர் சிறுவர் தின விழா

வேலணை,நவ.1

தீவுப்பகுதி தெற்கு பிரதேச செயலகத்தின் சர்வதேச சிறுவர் முதியோர்தின விழா இன்று புதன்கிழமை காலை 10.00 மணிக்கு பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் செ.இரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வேலணை பிரதேச சபைத் தலைவர் ந.கருணாகரமூர்த்தியும் சிறப்பு விருந்தினராக வேலணை கல்விக் கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தில்லைநாதனும் கலந்து கொள்வர்.

இந்நிகழ்வில் முதியோர்கள் கௌரவிக்கப்படுவதுடன், சிறுவர் முதியோர் தினப்போட்டியில் வெற்றியீட்டியோருக்கான பரிசில்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.(ஐ-167)

# நல்லூர் பிரதேச சபை - திருநெல்வேலி
## 2001 ஆம் ஆண்டுக்கான
# கேள்வி அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட கீழ்க்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் என்பனவற்றை 2001 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி தொடக்கம் 2001 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 31ஆம் திகதி வரை குத்தகைக்கு விடுவதற்கு கேள்விகள் 15-11-2000 ஆம் திகதி புதன்கிழமை காலை 10.00 மணி வரை நல்லூர் பிரதேச சபைத் தலைமைக் காரியாலயத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அன்று மாலை 2.00 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும். அத்தருணம் கேள்விக்காரரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.

கேள்விப்பத்திரங்கள் மூன்று பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியுடன் இரு பிரதிகளை 'தலைவர், நல்லூர் பிரதேச சபை, திருநெல்வேலி' என்றமுகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுக்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படல் வேண்டும். மூன்றாவது பிரதியை 'உதவி உள்ளூராட்சி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம், யாழ்ப்பாணம்'' என முகவரியிட்டு அனுப்பி வைத்தல வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் குறிப்பிடப்பட்ட மீளளிக்க முடியாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய வைப்புப்பணமும் செலுத்துவதன் பேரில் நல்லூர் பிரதேச சபை அலுவலகத்தில் 10-11-2000 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் பெறுபவர்கள் தமது அடையாள அட்டையைக் கொண்டு வருதல் வேண்டும்.

கூட்டுறவு சங்கங்கள் தவிர்ந்த தனிப்பட்டவர்கள் திருநெல்வேலி, கொக்குவில் சந்தை, திருநெல்வேலி துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் பொருட்டு விண்ணப்பப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள விரும்பின் ஏதாவது ஒரு வங்கியில் தங்கள் பெயரில் முறையே 15,00,000/-ற்கும் 2,00,000/-ற்கும் 2,00,000ற்குகுறையாது வைப்பில் உள்ளதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும். எந்த ஒரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு. ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப் பணம்மீளளிக்கப்படமாட்டாது.

கோயில் தோட்டம் மாட்டிறைச்சிக் கடை, கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக் கடை ஆகியவற்றிற்கு விண்ணப்பிப்பவர்கள் தாங்களாகவே இடத்தை தெரிவு செய்து கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட காணி உரிமையாளரின் சம்மதக் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும். கோண்டாவில் ஸ்ரேசனடி மாட்டிறைச்சிக் கடைக்கான இடம் இருபாலை வீதிக்கு தெற்குப் புறமாகவும் ஸ்ரேசனை அண்மித்தும் இருத்தல் வேண்டும். தெரிவு செய்யப்படும் கேள்விக்காரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 20/11/2000ம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ள வேண்டும். மேலதிக விவரங்களை நல்லூர் தலைமை அலுவலகத்திலும் கொக்குவில்/நல்லூர் உப-அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

குறிப்பு:-
1. திருநெல்வேலிச் சந்தைக் கடை இல. 1, 11 ஆகியவற்றின் மூன்று மாத வாடகை, ஒப்பந்தம் செய்யப்படும் தினத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
2. சந்தைகளை குத்தகைக்கு பெற்றுக் கொள்பவர்கள் சந்தைக்கு வரும் பொருள்களின் பெறுமதியின் 3%ற்கு மேல் சந்தை வரி அறவிடக் கூடாது.
3. எக்காரணம் கொண்டும் துவிச்சக்கர வண்டிக்கு ரூபா 1/-ற்கும் மோட்டார் சைக்கிலுக்கு ரூபா 2/-ற்கும் மேல் பாதுகாப்புக் கட்டணம் அறவிடக் கூடாது.

| சந்தைகள், இறைச்சிக் கடைகள் துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | மீளளிக்கப்படாத கேள்விப்பத்திர பணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த தொகை |
|---|---|---|---|
| **நல்லூர் உப - அலுவலகம்** | | | |
| 1. திருநெல்வேலிச் சந்தை | 500/- | 10,000/- | 32,40,000/- |
| 2. திருநெல்வேலிச்சந்தை து.ச.வ. பாதுகாப்பு நிலையம் | 500/- | 5,000/- | 3,35,650/- |
| 3. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல 11 | 350/- | 3,000/- | 45,150/- |
| 4. திருநெல்வேலிச் சந்தை ஆட்டிறைச்சிக் கடை இல. 1 | 350/- | 3,000/- | 45,150/- |
| **கொக்குவில் உப - அலுவலகம்** | | | |
| 1. கொக்குவில் ஆடியபாதம் சந்தை. | 500/- | 5,000/- | 99,900/- |
| 2. ஆடியபாதம் சந்தை மாட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 44,625/- |
| 3. ஆடியபாதம் சந்தை ஆட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 47,500/- |
| 4. கொக்குவில் உப-அலுவலக மாட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 68,250/- |
| 5. கொக்குவில் உப-அலுவலக ஆட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 40,000/- |
| 6. பலாலி வீதி, ஆட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 58,800/- |
| 7. கோயில் தோட்டம் மாட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 15,000/- |
| 8. கோண்டாவில் மாட்டிறைச்சிக் கடை | 350/- | 3,000/- | 20,000/- |
| 9. ஆடியபாதம் சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம். | 350/- | 3,000/- | 12,000/- |

**க. மணிபல்லவராஜன்** (ஜே.பி-யூ.எம்)
தலைவர்
நல்லூர் பிரதேச சபை.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
28-10-2000.

(சி/13644)

# சனசமூக நிலையம் புனரமைப்பு

கொக்குவில் மனோன்மணி சனசமூக நிலையம் அண்மையில் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட இச் சனசமூக நிலையம் இரண்டு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா செலவில் புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ளது. (ஐ-30)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சற்குணராஜா லீலாவதி

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் குருமன்காடு வவுனியாவை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சற்குணராஜா லீலாவதி 30-10-2000 திங்கட்கிழமை அன்று வவுனியாவில் காலமானார்.

அன்னார் சற்குணராஜா (லண்டன்) அவர்களின் அன்பு மனைவியும், சிவகங்கா, சிவராஜீவ், சிவதீபா ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற செல்லத்துரை – பூரணம் ஆகியோரின் அன்பு மகளும், இராஜரட்ணம்—அன்னம்மா அவர்களின் அன்பு மருமகளும், குஞ்சுக்கிளி மற்றும் காலஞ்சென்ற சிவராஜா, துரைராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும், சிறீஸ்கந்தராஜா தமயந்தி மற்றும் காலஞ்சென்ற செல்வராஜா, திலகராஜா ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் வவுனியாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
**பொ.விமலநாதன்**
இல. 07, கற்பகப்பிள்ளையார் வீதி,
கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம். (80087)

## அக்னெஸ் லோறன்ஸ்
(அம்மாப்பிள்ளை)

யாழ்ப்பாணம் ஆசீர்வாதப்பர் கோயிலடியை பிறப்பிடமாகவும் 2/1 றக்காலேனை வசிப்பிடமாகவும்கொண்ட அக்னெஸ்லோறன்ஸ் 30 — 10 — 2000 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் அந்தோனிப்பிள்ளை அன்னம்மாவின் அன்பு மகளும் லோறன்சின் (திரவியம் கட்டட ஒப்பந்தக்காரர்) அன்பு மனைவியும், மலர் (அந்தோனியாப்பிள்ளை) டானியல் (இந்தியா), காலஞ்சென்ற தேவரராஜா மற்றும் திரேசா (சறோ), பிறேமா யோகேஸ்வரி (France), யேசுதாசன் (German), காலஞ்சென்ற பிலோமினா ஆகியோரின் அன்புத் தாயாரும், ஏபிரகாம் றோஸ், றாஜி காலஞ்சென்ற றிச்சேட், பாலசுப்பிரமணியம், றோகினி, மாலா ஆகியோரின் அன்புமாமியாரும். டிக்சன் (கொழும்பு), நீரஜா (யாழ்பல்கலைக்கழகம்), குயின்சி ஆகியோரின் அன்புப்பேர்த்தியும், ஜெயராஜா (கட்டட ஒப்பந்தக்காரர் யாழ்ப்பாணம்), றொபேட். அன்ரன், றஞ்சிதம், ஜெயராணி ஆகியோரின் பெரியதாயாரும் ஆவார்.

இவரது பூதஉடல் நல்லடக்கத்திற்காக 5A, திபிரிக்காவத்த றோட் வெலிசற. றாகமவிலிருந்து புனித யுவானியார் ஆலய சேமக்காலைக்கு (நாகொட) இன்று 1-11-2000 பிற்பகல் 4-30 மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**திரேசா றிச்சேட் (சறோ)**
(மகள்)
19, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.
T. P. No. 075-346636
(80089)

## அந்தோனிப்பிள்ளை அல்பிறட்
(முன்னாள் பிரபல புடைவை வியாபாரி)

சுன்னாகம் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை அல்பிறட் நேற்று (31—10—2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் பேபிறெஜினாவின் அன்புக் கணவரும் அனற்மேசிநிர்மலா (ஆசிரியை — யூனியன் கல்லூரி), அருட்சகோதரி விமலினி (கார்மேல் சபை), பிறாங் அன்செலன் (J H. C. A/L 1999), அன்ரன் யோசவ் சேவியர் (தொழில் நுட்பக் கல்லூரி), அனற் மரிய பிறியிற்றா, அனற் மரியகொலற்றா (ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமிர்தநாதன், காலஞ்சென்ற அருளப்பு (பட்டின சபை—சுன்னாகம்) மற்றும் அருட்பிரகாசம் (ஓய்வு பெற்ற ஆசிரியர், அருணோதயக் கல்லூரி), மேரி மெற்றலின் (கல்முனை), அலோசியஸ் வின்சென்ற் (T A. நீர்ப்பாசனத்திணைக்களம், மூதூர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் நட்சத்திரம், அலோசியஸ் தர்மறாயா (S. D. W. கச்சேரி, அம்பாறை), மேரி அஞ்சலீனா, அதிசயராணி, பற்றிசியா றட்ணராணி மற்றும் மேரி யோசப்பின், மரியநாயகி, மரியதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அருட்திரு றொபின்சன் யோசவ் அவர்களின் பெரிய தந்தையுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (2—11—2000) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு திருப்பலியின் பின் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**
புனித அந்தோனியார் வீதி,
சுன்னாகம். (80093)

# தமிழகம் ஒன்றுபட்டால் இலங்கைப் பிரச்சினை தீரும்!

## வை. கோபாலசாமி நம்பிக்கை!



மதுரை. நவ 1

தமிழகத்தைச் சேர்ந்த தலைவர்கள் அனைவரும் ஒற்றுமையுடன், ஒரே குரலில் பேசினால் இலங்கைப் பிரச்சினைக்கு இறுதியான தீர்வு ஏற்படும் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி நம்பிக்கை தெரிவித்தார்.

தமிழ் நாட்டின் மதுரை நகரில் நேற்று முன்தினம் நடைபெற்ற ம.தி.மு.க மாவட்டத் தலைவர் ஒருவரின் இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் அமெரிக்காவில் நடைபெற்ற ஐ.நா. பேரவைக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ்ப்பாணத் தமிழரின் பிரச்சினை பற்றி குறிப்பிட்டதாகவும் —

யாழ்ப்பாணம் தமிழர்களின் மண் - அங்குள்ள பிரச்சினை பற்றிப் பேசுவதும், தமிழீழத்தை அங்கீகரிப்பதும் தவறில்லை என்றும் —

வை. கோபாலசாமி மேலும் கூறினார். (ஒ- 8)

# காங்கிரஸ் தலைவர் பதவி விவகாரம்; துதிபாடிகள்-தொண்டர்கள் இடையேயான போட்டி இது!

## ஜிதேந்திர பிரசாத் வர்ணிப்பு!!

புதுடில்லி, நவ. 1

இந்தியக் காங்கிரஸ் கட்சியின் தலைவர் பதவிக்கான தேர்தலில் சோனியா காந்தியை எதிர்த்து தான் போட்டியிடுவதை ஜிதேந்திர பிரசாத், சோனியாவைச சுற்றியுள்ள துதிபாடிகளுக்கும், காங்கிரஸ் கட்சியின் அடிமட்டத் தொண்டர்களுக்கும் இடையேயான போட்டி இது என்று வர்ணித்தார்

புதுடில்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

சோனியா காந்தியைச் சுற்றியுள்ள துதிபாடிகள் கூட்டம் காங்கிரஸ் கட்சியைப் புற்று நோய் போல் பாழ்படுத்தி விட்டதாகவும், அந்தக் கூட்டம் அடிமட்டத் தொண்டர்களைக் கட்சியை விட்டு விலகச் செய்வதாகவும் பிரசாத் அப்போது குற்றஞ் சாட்டினார்..

காங்கிரஸின் மாநிலக் குழுக்களின் முடிவுகளை கட்சிமேலிடம் மேற்கொள்வதை நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்திய அவர்—

உட்கட்சி ஜனநாயகத்தை வலுப்படுத்தவும்—

### உலக அரங்கில்

நலிந்த காங்கிரஸ் கட்சிக்குப் புத்துயிர் ஊட்டவுமே— தலைவர் பதவிக்கான தேர்வில் போட்டியிடுவதாகவும் கூறினார்.

காங்கிரசுக்கு மக்கள் செல்வாக்கு குறைந்து வந்த வேளையில் அதனைச் சீர்படுத்த சோனியாவின் ஆதரவை நாடிய காங்கிரஸ் தலைவர்கள் சோனியா தமது சொற்படி நடப்பார் என எதிர்பார்த்ததாகவும்—

ஆனால் சோனியாவின் அதிரடி நடவடிக்கைகளால் கட்சியில் தமது முக்கியத்துவத்தை இழந்த மூத்த தலைவர்களின் பக்கபலம் ஜிதேந்திராவுக்கு இருப்பதாகவும்— அதனாலேயே தலைமைப்பதவிக்கு தேர்தல் நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாத சோனியா ஆதரவுத் தலைவர்ஒருவர் தெரிவித்துள்ளார்.

### இந்திராகாந்தியின் நினைவுநாள்

மறைந்த இந்தியப் பிரதமர் இந்திரகாந்தியின் 16 ஆவது நினைவு தினம் நேற்று உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

சக்தி ஸ்தலத்தில் உள்ள அவரது சமாதியில் தலைவர்கள் மலரஞ்சலி செலுத்தினார்கள். [ஒ]

### புதிய மாநிலம்

இந்தியாவின் 26 ஆவது மாநிலமாக சட்டீஸ்கர் என்ற புதிய மாநிலம் நேற்று நள்ளிரவு முதல் உருவாகியுள்ளது. மத்தியப் பிரதேசத்தின் சில பகுதிகளைப் பிரித்து உருவாக்கப்பட்ட இந்த மாநிலச் சட்டசபை 90 உறுப்பினர்களைக் கொண்டது ஆகும்.

# மேற்குக்கரை - காஸா பகுதிகளில் அரபாத்தின் அலுவலகங்கள் மீது இஸ்ரேலிய ஹெலிகள் தாக்குதல்!

காஸா, நவ 1

பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் பாஸ்டா அமைப்பின் அலுவலகங்கள் மீது இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் நேற்று முன்தினம் சரமாரியான தாக்குதல்களை மேற்கொண்டன.

மேற்குக் கரையிலும், காஸா பிரதேசத்திலும் நப்லஸ், ரமலா, கான்யூனிஸ் ஆகிய பலஸ்தீன நகரங்களில் இயங்கிவரும் பாஸ்டா அலுவலகங்கள் மீது இஸ்ரேலிய ஹெலிகொப்டர்கள் ஏவுகணைகள் மூலம் தாக்குதல் நடத்தியதாகவும் —

இத்தாக்குதல்களில் ஏற்பட்ட உயிர், உடைமைச் சேதங்கள் குறித்து விவரங்கள் தெரியவரவில்லை என்றும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ராணுவ நடவடிக்கை குறித்து இஸ்ரேலியப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் எஸ்ராயின் ஸ்னே தொலைக் காட்சியில் பேசுகையில் கெரில்லா யுத்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென அரபாத்துக்கு உணர்த்தும் எச்சரிக்கை நடவடிக்கையே இந்தத் தாக்குதல் என்று தெரிவித்தார்.

சுதந்திர பலஸ்தீன நாடு உருவாகும் வரை பலஸ்தீனர்கள் தமது போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று யசிர் அரபாத் அறிவித்த உடன் இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டிருப்பதும்—

பலஸ்தீன விடுதலை இயக்கத்தில் அரபாத்தின் பாஸ்டா பிரிவினர் உட்பட பல்வேறு அமைப்புகள் இணைந்துள்ள போதும், பாஸ்டா அலுவலகங்கள் மீது மட்டும் தற்போது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கவை. (ஒ-8)

# இந்திய அரசியல் தலைவர்கள் ஈழத்தமிழர் உரிமைகளை ஏற்க கிருஷ்ணசாமி வலியுறுத்து!

ஆளுமையற்ற சிங்கள அரசும், சந்திரிகா குமாரதுங்கவும் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியாதென்பதை ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொள்ள மறுத்துவரும் இந்திய அரசியல் தலைவர்கள் உணர வேண்டும் என்று புதிய தமிழகம் கட்சியின் தலைவர் கிருஷ்ணசாமி சுட்டிக்காட்டியுள்ளார்.

சென்னையில் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கையில் இதனை அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அந்த அறிக்கையில் —

பண்டாரவளையில் சிங்களக் காடையர்கள் நாகரிகமற்ற முறையில் கொலைகளைச் செய்துள்ளனர். சிங்களவர்களுக்கு இத்தகைய வன்முறைகள் செய்வது புதிதல்ல. இந்தக் கொடிய சம்பவத்தின் பின்னராவது இலங்கை அரசும், சந்திரிகா குமாரதுங்கவும், ஈழத் தமிழர்களைக் காக்க முடியாதென்பதை இந்திய அரசியல் தலைவர்கள் புரிந்து கொண்டு இலங்கைத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார். (ஒ-8)

# ‘ஷார்ஜா’ போட்டி நடந்த போது சூதாட்டம் நடத்தியோர் கைது! லட்சக்கணக்கில் பணம் பறிமுதல்!

புதுடில்லி, நவ. 1

ஷார்ஜாவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்தியா — இலங்கை அணிகளுக்கிடையே இறுதிப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம், இந்தியாவில் முக்கிய நகரங்களில் பொலீஸார் மேற்கொண்ட சோதனைகளின் போது கிரிக்கெட் சூதாட்டம் நடத்திய ஏஜென்டுகள் பலர் கைது செய்யப்பட்டதுடன், லட்சக்கணக்கான பணம், செலுலார் போன்கள், வங்கி வரைவுக் காசோலைகள் உட்பட பல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படுகிறது

இந்திய அணியின் வெற்றி அல்லது தோல்வி தனிப்பட்ட வீரர்கள் பெறும் ஓட்டங்கள், விக்கெட்டுகள் ஆகிய இரண்டு வித சூதாட்டங்கள் நடைபெற்றதாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

“ஷார்ஜா” கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இலங்கை அணி 250 ஓட்டங்களுக்கு மேல் எடுத்ததும், இந்திய அணியினர் எவரும் எதிர்பாராத முறையில் 53 ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்ததும் குறிப்பிடத்தக்கவை. (ஒ 8)

# ஊழல் குற்றஞ்சாட்டப்பட்ட பிலிப்பைன்ஸ் அதிபர் எஸ்ரடோ பதவியை விட்டு விலக மறுப்பு!

மணிலா, நவ. 1

ஊழல் குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிலிப்பைன்ஸ் அதிபர் ஜோசப் எஸ்ரடோ பதவி விலக மறுத்துள்ளதுடன், துணை ஜனாதிபதி குளோரியா மெகாபகல் அரோயோவுக்கு பொருளாதாரத்துறையில் மிக உயர்ந்த பதவியை வழங்க முன்வந்துள்ளார்.

தொலைக்காட்சி மூலம் நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் அதிபர் எஸ்ரடோ நாட்டின் நலன் கருதி இணைந்து பணியாற்ற துணை ஜனாதிபதிக்கு நட்புக்கரம் நீட்டுவதாகவும—

பிலிப்பைன்ஸின் பொருளாதாரக் கொள்கைகளைக் கண்காணிக்கும் உயர் மட்ட அமைச்சரவைக் குழுவின் தலைவர் பதவியை அரோயோவுக்கு விட்டுக் கொடுக்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதச் சூதாட்டக்காரர்களிடம் பல கோடி டொலர் லஞ்சம் பெற்றதாக அதிபர் எஸ்ரடோ மீது குற்றஞ்சாட்டப்பட்டதை அடுத்து அவர் பதவி விலக வேண்டும் என்று கோரி அரோயோ கடந்த மாதம் அமைச்சரவையிலிருந்து பதவி விலகினார்

ஊழல் குற்றச்சாட்டு மற்றும் பதவி விலகல் கோரிக்கையின் சூத்திர தாரியாக துணை ஜனாதிபதி அரோயோ உள்ளதால் அவரைச் சமாதானப்படுத்தி தனது அதிபர் பதவியைப் பாதுகாக்க எஸ்ரடோ முயற்சிப்பதாகக் கருதப்படுகிறது. (ஒ-8)

# தலாய் லாமா வருகைக்கு தென்கொரியா அரசு தடை!

## சீனா மீதான அச்சம் காரணமாம்!!

திபெத்தியர்களின் ஆன்மீகத் தலைவரான தலாய் லாமா தமது நாட்டிற்கு வருவதற்கு தென்கொரியா அனுமதி மறுத்துள்ளது.

தென் கொரிய பௌத்த சங்கத்தின் அழைப்பின் பேரில் தலாய்லாமா அங்கு விஜயம் செய்ய இருந்தார். இதற்கு தென் கொரியா அனுமதி அளிக்க மறுத்து விட்டது.

இந்தத் தடைக்கான காரணத்தை தென்கொரிய அரசு வெளியிடாவிட்டாலும், சீனாவுடன் உள்ள சுமுகமான நட்புறவைக் குலைக்க தென் கொரியா விரும்பாததாலேயே, தலாய்லாமாவுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

1950 ஆம் ஆண்டு திபெத்தைச் சீனா ஆக்கிரமித்த பின்னர் 1959 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில தஞ்சமடைந்துள்ள தலாய் லாமா திபெத்தின் சுதந்திரத்துக்காக, சீன அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பி வருவதால் தலாய் லாமாவின் விஜயத்தால் சீனாவுடனான உறவு சீர்கெடும் என்று தென்கொரியா அஞ்சுவதாகக் கூறப்படுகிறது.

இந்த வருடம் சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற தென்கொரிய ஜனாதிபதி கிம்டேஜூங், ஏற்கனவே சமாதானத்துக்கான நோபல் பரிசுபெற்றவரான தலாய் லாமாவின் வருகைக்குத் தடை விதித்திருப்பது உலக சமாதானத்தில் நாட்டம் கொண்டவர்கள் மத்தியில் வியப்பையும் கவலையையும் தோற்றுவித்துள்ளது.

இந்த வருட முற்பகுதியில் தலாய்லாமாவின் விஜயத்துக்கு ஜப்பானிய அரசு ஆரம்பத்தில் அனுமதி அளிக்க மறுத்ததும்—

பின்னர் வருகைக்கு அனுமதி அளித்தபோதும் அரசியல் சந்திப்புகளுக்குத் தடை விதித்ததும் குறிப்பிடத்தக்கவை. (ஒ)

# ஆந்திராவில் மூளைக் காய்ச்சல்

ஹைதராபாத், நவ. 1

இந்தியாவின் ஆந்திரா மாநிலத்தில் பரவியுள்ள ஜப்பானிய மூளைக் காய்ச்சல் நோயினால் 19 சிறுவர்கள் இறந்துள்ளனர், மாநிலத்தின் 9 மாவட்டங்களில் 100 சிறுவர்கள் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 20 வருடங்களாக ஆந்திராவில் அவ்வப் போது பரவி வரும் மூளைக்காய்ச்சல் நோயினால் கடந்த வருடம் 203 குழந்தைகள் உயிரிழந்தனர்.

(ஒ)

# கோப்பாய்ப் பிரதேசத்தில் 10 ஆயிரம் வீடுகள் சேதம்

வலி. கிழக்கு, நவ. 1

கோப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் வன்செயல் காரணமாக 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள் சேதமுற்றிருப்பதாக பிரதேச செயலக புள்ளி விவரங்கள் மூலம் அறிய வந்துள்ளது.

1996 ஆம் ஆண்டு மக்கள் மீளக்குடியேறிய பின் எடுக்கப்பட்ட புள்ளி விவரங்களின் படி 3 ஆயிரத்து 542 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. 5 ஆயிரத்து 529 வீடுகளுக்கு பகுதி சேதமும் 777 வீடுகளுக்கு சிறுசேதமும் ஏற்பட்டுள்ளன.

மொத்தம் 9 ஆயிரத்து 548 வீடுகள் சேதமுற்றுள்ளன.

இதேவேளை —

வீடுகள் சேதமுற்றோருக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவான 25 ஆயிரம் ரூபா இப்பிரதேசத்தில் இதுவரை 3 ஆயிரம் பேருக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-180)

## கூட்டம்

யாழ்ப்பாணம், நவ. 1

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் அபிவிருத்திச் சங்கச் செயற்குழுக் கூட்டம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கோண்டாவில் நிருகல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது. செயற்குழு உறுப்பினர் அனைவரையும் சமுகமளிக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (ஐ-ரி)

## விசர்நாய் கடித்த சிறுமி மரணம்

யாழ்ப்பாணம், நவ. 1

ஒருமாதத்துக்கு முன் விசர் நாயினால் கடியுண்டு, விசர் நாய்க் கடியினால் ஏற்படும் நோய்க்கான ஏ.ஆர்.வி தடுப்பூசி மருந்தைப் போடாத சிறுமி ஒருவர் அந்நோய்க்காளாகி உயிரிழந்தார்.

காரைநகர், பாலாவோடையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இராசதுரை சர்மிளா (வயது 9) என்பவரே மரணமானவராவார்.

திடீரென ஏற்பட்ட காய்ச்சல், மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகளைக் கண்டு கடந்த 19 ஆம் திகதி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இச்சிறுமி 11 நாள்களின் பின் அங்கு மரணமானார். (இ-15)

## ஊழியருக்கு கடனுதவி

யாழ்ப்பாணம், நவ. 1

பனை அபிவிருத்திச்சபையில் பணியாற்றும் இடம்பெயர்ந்த ஊழியர்களுக்கு சபையினால் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது

சபைத் தலைவரின் விசேட அனுமதியுடன் இந்தக் கடனுதவி வழங்கப்பட்டதாக சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-5)

## 3 ஆம் கட்ட கொடுப்பனவு

வலி. கிழக்கு, நவ. 1

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் (ஜி.ரி.இஸட்) நிர்மாணிக்கப்படும் வீட்டுத்திட்ட பயனாளிகளுக்கான மூன்றாம் கட்டக் கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

கொடுப்பனவுகளைப் பெறும் பயனாளிகள் உடனடியாக தத்தமது பிரிவு கிராம உத்தியோகத்தர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (ஐ-180)

## மரத்தால் வீழ்ந்து காயம்

தென்மராட்சி, நவ. 1

கள் எடுப்பதற்காக தென்னை மரத்தில் ஏறி ஓலையைப் பிடித்த போது அது முறிந்ததால் தவறி வீழ்ந்து படுகாயமடைந்த குடும்பஸ்தர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் கொடிகாமம் தவசிகுளத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் இதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தசாமி (வயது 45) என்னும் ஏழு பிள்ளைகளின் தந்தையே படுகாயமடைந்தவராவார். (ஐ-117)

## மாணவனுக்கு அறக்கொடை

வடமராட்சி, நவ. 1

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் யாழ். மாவட்டத்தில் அதிக கூடிய புள்ளிகளைப் பெற்ற (182) வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாலய மாணவன் புஸ்பராசா சிவரூபனுக்கு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கி மூலம் 5 ஆயிரம் ரூபாவுக்கான அறக்கொடைத் திட்டச் சான்றிதழை வழங்கியுள்ளது.

வித்தியாலய அதிபர் த. தவேந்திரராசா தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் சாரதா சேவாச்சிரமத்தின் சார்பில் சுவாமி சித்ருபானந்தா இச்சான்றிதழை வழங்கினார். [ஐ-173]

## 500 குடும்பங்களுக்கு கொடுப்பனவு

தென்மராட்சி நவ. 1

தென்மராட்சி கிழக்குப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்தோரில் 500 குடும்பங்களுக்கான உடனடி நிவாரணக் கொடுப்பனவான 2 ஆயிரம் ரூபா கடந்த புதன்கிழமை முதல் கொடிகாமம் கிராமிய வங்கி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

பாலாவி, கொடிகாமம் வடக்கு, கொடிகாமம்மத்தி, கொடிகாமம் தெற்கு, உசன், விடத்தற்பளை, கெற்பேலி, எழுதுமட்டுவாள் வடக்கு, மிருசுவில் தெற்கு, குடமியன், வரணி, இயற்றாளை ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த 500 குடும்பங்களுக்கே இக் கொடுப்பனவு வழங்கப்படுவதாக தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார். (ஐ — 117)

## திருடிய ஆட்டைக் கொன்று தலையை வீசிய திருடர்கள்

யாழ்ப்பாணம், நவ. 1

இரவுநேர ஊரடங்குச்சட்டம் அமுலில் இருந்தபோது திருடப்பட்ட ஆட்டின் தலை கோயிலுக்கு அருகில் போடப்பட்டிருந்தது. இச்சம்பவம் அண்மையில் வட்டுக்கோட்டைப் பகுதியில் இடம்பெற்றுள்ளது

வட்டுக்கோட்டை தெற்கில் வசித்துவரும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழும் பெண்ணான நாகராசா தயாளம் கால்நடைகளை வளர்த்து விற்று சீவியம் நடத்தி வருபவர்.

இவரது வீட்டில் கட்டி வைக்கப்பட்டிருந்த மூவாயிரம் ரூபா பெறுமதியான மறி ஆடு இரவு ஊரடங்குச் சட்டம அமுலில் இருந்த வேளை இனந்தெரியாதோரால் திருடிச் செல்லப்பட்டது.

மறுநாள் காலையில் திருடப்பட்ட ஆட்டின் தலை வெட்டப்பட்டு வீட்டிலிருந்து சுமார் 200 யார் தொலைவிலுள்ள ஞானவைரவர் ஆலயத்துக்கு அருகில் போடப்பட்டிருந்தது. தலையைப் போட்டுவிட்டு ஆட்டின் உடலை மாத்திரம் திருடர்கள் எடுத்துச் சென்றுள்ளார்கள். (ஐ-15-173)

## இடம்பெயர்ந்த மாணவருக்கு சீருடைத்துணி விநியோகம்

தென்மராட்சி, நவ. 1

தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து வடமராட்சி, வலிகாமம் ஆகிய பிரதேசங்களில் உள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இலவச சீருடைத் துணிகள் அந்தந்தப் பாடசாலைகளில் நேற்று முன்தினம் முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

முதலில் பளைப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு வழங்கிய பின்னர் தென்மராட்சி பிரதேசத்தின் சங்கத்தானை, கல்வயல், பெருங்குளம், கெருடாவில், மட்டுவில், சரசாலை, கைதடி, நாவற்குழி, தனங்கிளப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்படுமென வலயக் கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மாணவர்களுக்கு வழங்கவென வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் யாழ்ப்பாணம் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்ட சீருடைத்துணிகள் தென்மராட்சி கல்வி வலய அலுவலகத்திற்கு கடந்த வாரம் கிடைத்தன. (ஐ-117)


# கண்ணீர் அஞ்சலி

பண்டத்தரிப்பு ப.தெ.வ. அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தில் கிளை முகாமையாளராகப் பணிபுரிந்த

## மணியம் செல்வராசா

என்பவர் 31 - 10 - 2000 நேற்று அகால மரணமடைந்துள்ளார். அவரது பிரிவால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள்.
பணியாளர்கள்,
பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ கூ. சங்கம்.
பண்டத்தரிப்பு.

(சி/13645)

# முதலாண்டு நினைவலைகள்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 02 | 01 |
| 07 | 11 |
| 1931 | 1999 |

அமரர்

## நீக்கிலான் செபமாலை

(இளைப்பாறிய ஆசிரியர்)

ஐயா!

பெற்றோருக்கு நல்ல தனயனாய்
மனைவிக்கேற்ற நல்ல கணவனாய்
நீர் வாழ்ந்த வாழ்வை நினைத்து
கண்ணீரில் கலக்கின்றோம்.

இன்று (01—11—2000) புதன்கிழமை காலை 6. 45 மணிக்கு (பு: நே.) உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்

என்றும் கண்ணீருடன்
மனைவி.

உரும்பிராய். (79937)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி மனோகரி கிருபாகரன் (கிளி)

பிரதான வீதி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோகரி கிருபாகரன் நேற்றுமுன்தினம் (30-10-2000) திங்கட்கிழமை இறையடி சேர்ந்து விட்டார்.

இவர் மார்க்கண்டு - நாகம்மா அவர்களின் அன்பு மகளும், கிருபாகரனின் அன்பு மனைவியும், சாயிதன், சாயிபிரியா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், குணபூசணி, மகேஸ்வரி, மகேந்திரன், றோகினி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராசரத்தினம், அருளானந்தம், செல்வராணி, சிறீதரன் ஆகியோரின் மைத்துனியும், கேமலதா, கெலன்ராஜ் (பாபு), கெலன்குமார், கெலன்சுரேஸ், கெலன்சங்கர், றஜீவன், டிலக்சன், கஜந்தன் ஆகியோரின் பாசமிகு சிறியதாயாரும், அஜி, அர்ஜுன், அபிரா, தங்கராசா (கொழும்பு), சுதா (லண்டன்) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
மு. அருளானந்தம்,
அ. றஜீவன்
(மாணவன் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி).

கோப்பாய். (80085)

## தோமஸ் லீனப்பு

பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும் செம்பியன் பற்றை வசிப்பிடமாகவும் கொண்ட தோமஸ் லீனப்பு 30-10-2000 (திங்கள்) அன்று இரணைப்பாலையில் காலமானார்.

இவர் எட்வீசம்மா இத்தினம்மாவின் அன்புக் கணவரும், ஞானரத்தினம் (இரணைப்பாலை), ஜெயராசா (இரணைப்பாலை), ஜெயமணி (இரணைப்பாலை), பியதாஸ் (கனடா), குணம் (இத்தாலி) ஜெயம் (இத்தாலி), இதயராஜ் (இத்தாலி) ஆகியோரின் தகப்பனாரும், சுவக்கீன் (இரணைப்பாலை), சீவரத்தினம் (இரணைப்பாலை), ஜேம்ஸ்(இரணைப்பாலை). குணசீலி (கனடா), வசந்தி (கனடா) றஞ்சினி (இத்தாலி), வசந்தி (இத்தாலி) ஆகியோரின் மாமனாரும், ஜோட்ஜ்எட்வேட், பிறேமா, கனிமா, ஜெனிமா, றசிமா, மோகன், ரகு, இளவரசி, சுமதி, காந்தன், சுகந்தன், டல்சி, மதன், றஞ்சித், கமல், சிந்து, சியானி, ஜெனி, றொபினா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 31-10-2000(செவ்வாய்) இரணைப்பாலை பற்றிமா மாதா ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

தகவல்:
ஜே. சுகந்தன்
பேரன்

பருத்தித்துறை. (80081)

உதயன்

## வழமையான கண் துடைப்பு!

மலையகத்தில் சிங்களவருக்கும் தமிழருக்கும் இடையேயான மோதல்களும் வன்முறைகளும் பரவி உள்ளன. அதாவது இனக்கலவரம் தலவாக்கொல்லையில் இருந்து நுவரெலிய மாவட்டத்தின் வேறு பகுதிகளுக்கும் பரவி இருக்கிறது.

பண்டாரவளை தடுப்பு முகாமில் தமிழ் இளைஞர்கள்— அரசாங்கத்தின் பாதுகாப்பில் இருந்த தமிழ் இளைஞர்கள்— கொன்று குவிக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் கலைக்கப்பட்டதே கலவரம் வெடிக்கக் காரணம் என்று ஒரு சாரார் கூறுகிறார்கள்.

ஒரு சிறு சம்பவத்தை மையமாகக் கொண்டேனும் சிங்கள—தமிழ் மக்கள் தமக்கிடையே மோதிக் கொள்வதற்கு அவர்களைத் தூண்டி விடுவதற்கு ஒரு கும்பல் சந்தர்ப்பம் பார்த்திருந்தது என்றும் அதுவே இக் கலவரத்துக்குக் காரணம் என்றும் வேறு சில தரப்புகள் கூறுகின்றன.

எது எப்படியிருப்பினும் மலையகத்தில் இனக் கலவரம் மூளுவதற்குப் பண்டாரவளைப் படுகொலைகளே பிரதான காரணம்; மூலம் என்பது வெளிச்சமான உண்மை.

பண்டாரவளைப் படுகொலைகள் குறித்துச் சமாதானப் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் அந்தச் சம்பவம் உணர்த்தும் உண்மைகளை வெளிப்படுத்தி உள்ளது. போர் மனோபாவத்தை வடக்கு — கிழக்குப் பிரதேசத்திற்குள் மட்டும் கட்டுப்படுத்த முடியாது என்பதும் பண்டாரவளைச் சம்பவம் உணர்த்தும் உண்மைகளில் ஒன்றெனப் பேரவை எடுத்துக்காட்டுகிறது. அந்த அறிக்கை பல விடயங்களை ஆழமாகத் தொட்டுக் காட்டுகிறது.

போரில் விடுதலைப்புலிகளை அழிக்கப் போவதாக பிரதமர் ரத்னசிறி கூறிவந்தார். அதனை உள்வாங்கிக் கொண்டவர்கள் விடுதலைப்புலிகள் சந்தேக நபர்களை-அரசிடம் சரணடைந்த தமிழ் இளைஞர்களை- கொன்று குவித்திருக்கிறார்கள்.

இராணுவத் தீர்வைக் காண்பதிலேயே அரசாங்கம் முழு அக்கறையும் கொண்டுள்ளது என்ற எண்ணம் அரசின் பாதுகாப்பு ஊழியர்களிடம் பதிவாகியிருக்கிறது. அதன் விளைவே பண்டாரவளைப் படுகொலைகள் என்றும் கொள்ளலாம் அல்லவா?

இனப்பிரச்சினை விவகாரத்தில் அரசாங்கம் இரட்டை வேடம் போடுதல்; இரட்டை நாக்கால் பேசுதல் ஆகியவை நாட்டை அழிவுப் பாதைக்குக் கொண்டு செல்லும் என்று பகுத்தறிய முடியாதவர்களுக்குப் பண்டாரவளைப் படுகொலைகள் நன்றாக உணர்த்தியிருக்கின்றன.

இராணுவத் தீர்வு என்பதன் மறைமுக அர்த்தம் மற்றவர்களை அழிப்பதென்ற மனோபாவத்தை தோற்றுவித்திருக்கிறது; அது பரந்து வளர்ந்துள்ளது. அதன் விளைவே பண்டாரவளைப் படுகொலைகள்.

சுற்றி வந்து பார்க்கும்போது பண்டாரவளைப் படுகொலைகளுக்கும், அதன் வழி மலையகத்தில் பரவியுள்ள இனக்கலவரத்துக்கும் அரசாங்கமும் அதன் செயற்பாடுகளும், தேர்தல் பேச்சுக்களுமே காரணம்.

உண்மை இதுவாக இருக்கும்போது, பண்டாரவளைப் படுகொலைகள், இனக் கலவரம் குறித்து விசாரணைகள் மேற்கொள்வது பயனற்றவை. வழமையான வெறும் கண் துடைப்பே!

# வசன காவியமாகக் கந்தபுராணம்; தேவைக்கேற்ற வரலாற்று நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 1

கந்தபுராணக் கலாசாரம் எனப் புகழப்படும் யாழ்ப்பாணக் கலாசாரத்தில் வாழும் இன்றைய தலைமுறை பெருமை பொதிந்த கந்த புராணத்தை இலகுவில் படித்து தெளிந்து கொள்வதில் இருந்த பெரும் குறைபாட்டை இந் நூல் நீக்கி உள்ளது.

சகலரும் படித்துப் பயன் பெறத்தக்க வகையில் கந்த புராணத்தை இலகு வசன நடையில் தந்துள்ளார் அருட்கவி ஐயா அவர்கள். இது ஒரு வரலாற்றுப் பெருமை மிக்க நிகழ்வாகும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக்கழக மெய்யியல் துறை பேராசிரியர் நா. ஞானகுமாரன்.

யாழ். இந்து சமயப் பேரவைத் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பியின்

## வெளியீட்டு விழாவில் உரை

கந்த புராண வசன காவிய வெளியீட்டு விழாவில் வெளியீட்டுரை நிகழ்த்திய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இவ் விழா யாழ். நகரில் உள்ள சத்திரம் ஞானவைரவர் ஆலய முன்றலில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முன்னதாக நூலாசிரியர் வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்தில் இருந்து விழா நடைபெற்ற இடத்துக்கு மேள வாத்தியங்களுடன் அழைத்து வரப்பட்டார்.

ஞானவைரவர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் கு. கங்கைவேணியன், செயலாளர் க. கணேசலிங்கம் ஆகியோர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். நல்லை ஆதீன குருமுதல்வர் ஆசியுரை வழங்கினார்.

இந்து சமயப் பேரவையின் உப தலைவர் ஆ. மகாலிங்கம் தலைமையுரை ஆற்றுகையில் தெரிவித்ததாவது:-

அன்னியர் ஆட்சியில் சோதனைகளுக்கு உள்ளான எமது மதமும மொழியும் இன்னும் மகா பெரிய சோதனைகளைச் சந்திக்க வேண்டியுள்ளது. இந்த நெருக்கடியான சூழ்நிலையில் நாம் பெரும் தியாகத்துடன் செயற்பட வேண்டிய நிலையிலுள்ளோம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தோன்றி எமது மக்களின்நலனிற்காக ஏற்படுத்திய சமய சமூகப் புரட்சியை நாம் என்றும் மறந்து விடமுடியாது. அதேபோன்று இன்றைய நெருக்கடி நிறைந்த சூழ்நிலையில் நாமனைவரும் அணிதிரண்டு எமது மொழியை காப்பாற்றவும் எமது மதத்தைக் காப்பாற்றவும் இந்து சமயப்பேரவைப் பணிகளுக்கு ஆதரவு நல்க வேண்டும். இந்து சமயப் பேரவைப்பணிகளுக்கு மக்கள் திரண்டுவழங்கும இணையற்ற ஆதரவிற்கு நாம் என்றும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம் — என்றார்.

யாழ். மாவட்ட முன்னாள் நீதிபதி மு. திருநாவுக்கரசு பேசுகையில் கூறியதாவது:-

யாழ். நகரிலுள்ள அனைத்து வர்த்தகப் பெருமக்களும் திரண்டு நின்று அருட்கவிமீது தாம் கொண்டுள்ள அளவற்ற அன்பை வெளிப்படுத்துகின்றார்கள். இதன் மூலம் வர்த்தகர்கள் பெரு நன்மையைப் பெறுபவர்கள் என்பது உண்மை. இவர்கள் அருட்கவியின் தலைமையில் இந்து சமயப் பேரவை மேற்கொள்ளும் தர்மப்பணிகளுக்கு உதவ வேண்டும் — என்றார்.

### ஆதரவு தேவை

நல்லை ஆதீன சுவாமிகள் ஆசியுரையில் கூறியதாவது:-

யான் சிறுவனாக இருக்கும் போது அருட்கவி ஐயாவின் பிரசங்கங்களை கேட்டு வந்துள்ளேன். ஐயா எழுதிய சந்நிதி முருகன் தவபுராண வெளியீட்டு விழாவிற்கு நல்லைக் குருமணியோடு சென்றேன். இன்று கந்தபுராண வசன காவிய விழாவில் எமக்கு ஆசியுரை வழங்க அரிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனை எண்ணி மகிழ்கிறேன். அருட்கவியின் தலைமையில் இயங்கும் இந்து சமயப் பேரவையின் பணிகளுக்கு இந்துக்கள் அணிதிரண்டு ஆதரவு வழங்குவதன் மூலம் எமது மொழியையும் மதத்தையும் காப்பாற்ற முடியும் — என்றார்.

### மாபெரும்ஞானி

இந்து சமயப் பேரவைக் கௌரவ செயலாளர் திரு சி. சுக்கிரீவன் பேசுகையில்:—

ஈழத்திருநாட்டில் இன்று நம்மத்தியில் வாழ்கின்ற மாபெரிய அருளாளர் அருட்கவி விநாசித்தம்பிஐயா. அவர்களின் அருளை நுகர்வதற்கு அவரது ஆச்சிரமத்தைச் சூழ என்றும் மக்கள் கூட்டம் திரண்டபடியே இருக்கின்றது. அவர் சதாசிவன் மீதும் மனோன்மணி மீதும் கொண்ட அளவற்ற பக்தியால் இந்தப் பெரும்பேறு அவருக்குக் கிடைத்துள்ளது. அவர் என்றும் உலகம் வாழ வேண்டும் என்று எண்ணி ஆசீர்வதித்தபடியே இருக்கிறார். இத்தகைய பெருமை பெற்ற மாபெரும் ஞானியை இந்து சமயப் பேரவை பெற்றதையிட்டு பெருமையடைகிறது. இவ்விழாவில் விழாச் சபையினர் சார்பில் அருட்கவியின் திருவருட் பணிகளைப் பாராட்டிப் போற்றிப் பொன்னாடை போர்த்தி 'திருவருட் கவிமணி' எனும் கௌரவ விருதை வழங்குவதையிட்டுப் பெருமையடைகிறோம்— என்றார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் பேசுகையில் —

இன்றைய இளைய தலைமுறையினர் எமது மொழியின் பழைய கவிஇலக்கண மரபை மறந்து பாடல்களைப் பாடுகிறார்கள் இதனால் எமது மொழி செய்யுள் வளத்தை இழந்து விடுவோமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது. அருட்கவி அவர்கள கவிபுனைவதில் மாபெரும் வல்லமை பொருந்தியவர். அவர் மக்கள் விளங்க வேண்டும் என்று எண்ணியே வசனகாவியமாக கந்தபுராணத்தைத் தந்துள்ளார். இதனை அம்மானைப் பாணியில் யாத்து எமக்கும் எமது மொழிக்கும பெருமை சேர்த்துள்ளார் — என்றார்.

இவ் விழாவில் நூற்பிரதிகளை யாழ்நகரிலுள்ள வர்த்தகப் பெருமக்கள் பெற்றுக் கொண்டனர்.

யாழ். மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம், செஞ்சொற்செல்வர் ஆறு திருமுருகன், வி. கனகராசா, அருள்நெறிச்செல்வர் வி. செல்வரத்தினம், கவிஞர் காரை. எம். பி. அருளானந்தம், கா. நித்தியானந்தன், ஐ. கே. சந்திரசேகரம் ஆகியோர் உரையாற்றினர். (ஐ)

## மரம் நடும் விழா

யாழ்ப்பாணம், நவ. 1

புங்குடுதீவு பெருங்காடு தெற்கு கிராஞ்சியில் மரம் நாட்டு விழாவும், மரம்நடும் பயிற்சியும் நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீவகம் தெற்கு பிரதேச செயலர் செ. இரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளன.

மரம் நடும் பயிற்சிகளை யாழ். மாவட்ட விவசாயப் பணிப்பாளர் எஸ். சின்னத்துரை, யாழ். மாவட்ட விவசாய பாடவிடய உத்தியோகத்தர் எஸ். பொன்னையா, யாழ். மாவட்ட பண்ணைப் பெண்கள் விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திருமதி எஸ். சண்முகநாதன், தீவக விவசாயப் போதனாசிரியர் செல்வி டி. எஸ். சொலமன் ஆகியோர் இப்பகுதி விவசாயிகளுக்கு வழங்குவார்கள்.

பல்வேறு பல்லின பழமரங்கள், கமுகு, தென்னை போன்ற பல வேறு பயன் தரும் மரங்கள் மரம் நாட்டு விழாவின் போது நடப்படும்.

இவ் வைபவத்துக்காக திட்ட உதவியையும் பயிற்சியையும் திருநெல்வேலி அரசினர் விவசாயப்பண்ணை விரிவாக்க செயலகம் வழங்குகிறது. (ஐ-173)

## டிராக்டர் தடம் புரண்டு இருவர் காயம

தென்மராட்சி, நவ. 1

வீதி அமைக்கும் பணியில் ஈடுபடும் புல்டோசரின் உருளையை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரப் பெட்டி தடம் புரண்டதில் அதில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை வல்லை வெளியில் இடம் பெற்றது.

கைதடியிலிருந்து இடம் பெயர்ந்து துன்னாலையில் தங்கியுள்ள கந்தன் செல்வராசா (வயது 32) பொலிகண்டியில் தங்கியுள்ள சின்னத்தம்பி சுப்பிரமணியம் (வயது 45) ஆகியோரே காயமடைந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய்ப் பகுதியில் வீதிதிருத்த வேலைக்காக உருளையை ஏற்றி வந்த போது வாகனம் ஒன்றுக்கு வழிவிடுவதற்காக வீதியோரமாக உழவு இயந்திரத்தை செலுத்திய போது பெட்டி தடம் புரண்டதாகவும் பெட்டியில் பயணம் செய்த ஏனைய ஒன்பது பேர் தெய்வாதீனமாக உயிர் தப்பியதாகவும் தெரிவிக்கப்பட்டது (ஐ-117)

## காரைநகரில் கடை உடைத்து பொருள்கள் திருடப்பட்டன

### ஒரு மாத காலத்தில 3 ஆவது சம்பவம்

காரைநகர், நவ. 1

காரைநகர் பழைய கண்டிப் பகுதியில் இரவு வேளை கடை ஒன்று உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

தனியாருக்குச் சொந்தமான பலசரக்குக் கடை ஒன்றே உடைக்கப்பட்டது.

காரைநகரில் கடைகள் உடைக்கப்பட்டு பொருள்கள் திருடப்படுவது அண்மைக் காலமாக அதிகரித்து வருகின்றது கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னரும் இரண்டு கடைகள் உடைக்கப்பட்டு பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் திருடப்பட்டன. இதனால் இப்பகுதி வர்த்தகர்கள் கவலையடைந்துள்ளனர். (இ-73)

## சைக்கிளை ஓட்டிச் சென்றவர் திடீரென வீழ்ந்து மரணம்

வீதியில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த வேளை திடீரென சைக்கிளுடன் கீழே விழுந்தவர் அவ்விடத்திலேயே மரணமானார்.

ஆரியகுளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஆரியகுளத்தைச் சேர்ந்த திரவியம் இராசேந்திரம் (வயது 38) என்பவரே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம் இரவு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்ட இவரது சடலம் நேற்று அங்கு நடைபெற்ற பிரேத பரிசோதனை, மரணவிசாரணையை அடுத்து உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

பிரேத பரிசோதனை அறிக்கை விபரம் உடன் சமர்ப்பிக்கப்படவில்லை. (ஐ-15)

## சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்கள் மூடப்பட்டன

சப்பிரகமுவ பல்கலைக்கழக மாணவர்களிடையே சின்னமுத்து நோய் பரவியதை அடுத்து பல்கலைக்கழகத்தின் மூன்று பீடங்கள் கடந்த 23 ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளன என்று அதன் பதிவாளர் எம் எஸ் ரட்ணதிலக தெரிவித்தார்.

வியாபார முகாமைத்துவம், சமூக விஞ்ஞானம், அளவையியல் விஞ்ஞானம் ஆகிய பீடங்களே மூடப்பட்டுள்ளன.

இந்தப் பீடங்களில் எண்ணூறு மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இவர்களில் 30 மாணவர்களே சின்னமுத்து நோயால் பீடிக்கப்பட்டனர். (ஐ-3)

### நாளை

ஐப்பசி 17

வியாழக்கிழமை

திதி: ஷஷ்டி

முன் இரவு 8.30 வரை.

நட்சத்திரம்: பூராடம்

பிற்பகல்: 5. 05 வரை

ஸ்கந்த ஷஷ்டி விரத நாள்

சுபநேரம்: 7. 34 — 9 04

ராகுகாலம்: 01 34 —3 04

(பாலுக்கும் இரவுக்கும் பகுதி நேரப்படி)

### உதயவாக்கு

பாவத்தால் சிலர் எழுகின்றனர் ஒழுக்கத்தால் சிலர் வீழ்கின்றனர்.

- ஷேக்ஸ்பியர் -

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

புதிய பெரிய கோண ஸ்பீக்கர் 30 (இந்தியத் தயாரிப்பு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: செல்வலிங்கம், மாவடி ஒழுங்கை, ஒடக்கரை, பருத்தித்துறை. (80037)

நல்ல நிலையில் உள்ள புதிய மொடல **YAMAHA** - 80 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: **M.**குலேந்திரன், 122/10, பருத்தித்துறை வீதி. ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (80067)

ஊசிலி எஞ்சின் சீவல் மெசின், நிலை, கதவு, சோக்கேஸ் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: க. சிவப்பிரகாசம், பெற்றோல் செற முன் ஒழுங்கை, மானிப்பாய்.(80044)

கமரா **(Cannon-Eos, Zoom Lens)**, நீர் இறைக்கும் இயந்திரம் **(Kubota-Robin)** தளபாடங்கள **(Show Case, Dressing Table),** மோட்டர் **(1.5 HP, 1HP, 1/2 HP)** தொடர்பு: பொ.யோகநாதன், கரண வாய் மேற்கு, கரவெட்டி (மண்டான் தபாற்கந்தோருக்கு எதிரில்) (80070)

## தேவை

ரெலிபோன் **Booth Box** தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் சகல விவரங்களுடன் தொடர்பு கொள்ள வும். விளம்பர இல. 1127, மே/பா உதயன். (80060)

## தவறிவிட்டது

4 ஆம வட்டாரம் எழுவைதீவைச் சேர்ந்த யக்கோப்பிள்ளை, மடுத் தீனுப்பிள்ளை என்பவருடைய தேசிய அடையாள அட்டை (இல.253151498 v) விசேட அடையாள அட்டை (இல. 091300717) என்பன 21-10-2000 சனிக் கிழமை யாழ்.பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட முக வரியில் ஒப்படைத்துதவவும். (80043)

5.ஆம் வட்டாரம், வேலணை வடக்கு, வேலணையைச் சேர்ந்த ஞானரத்தினம தர்சன என்பவருடைய விசேட அடையாள அட்டை (இல. 091200577) கடந்த 21-10-2000 அன்று யாழ்ப்பாணத்துக்கும் வேலணைக் கும் இடையில் தவறிவிட்டது. தயவு செய்து கண்டெடுத்தவர்கள் மேற்படி முகவரியில் தொடர்பு கொள்ளவும். (80063)

**R.**எழுத்து பொறிக்கப்பட்ட 3/4 பவுண் மோதிரம் ஆரியகுளம் சிவில் காரியாலயத்துக்கு அண்மையிலோ அல்லது வழியிலோ கடந்த திங்கட் கிழமை தவறிவிட்டது. கண்டெடுத்த வர்கள் தயவு செய்து சிற்றி ரெலி கொம், இராமநாதன் வீதி, வளாகச் சந்தி எனும் முகவரியில் கொடுத்து தவவும். சன்மானம் நன்றியுடன் தரப் படும், (80072)

## காணவில்லை

எனது கடையின் முன்பக்கத்தில் சிமெந்தால் செய்யப்பட்ட இரண்டு யானைக்குட்டிகளைக் காணவில்லை. அதைக் கண்டவர்கள் அல்லது அது பற்றிய தகவலைத் தெரிந்தவர்கள் கீழ் உள்ள விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். **A.M** கனகசிங்கம், 5ஆம் வட்டாரம், வெள்ளைக் கடற் கரைவீதி, மண்கும்பான். (80049)

## DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக் கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக் கொடுக்கப்படும். (இரு பிரதி கள் கட்டுவதற்கான கட்டணம் ரூபா 350/-) தொடர்பு: பாரதி, 430, காங் கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 3081 (c/13637)

## தவறவிடப்பட்டுள்ளது

26-10-2000 அன்று **K.K.S** வீதி யில் பெண்கள பாவிக்கும் கைப்பை யுடன் திறப்புக்கோர்வை, பெண்கள் கட்டும் கைக்கடிகாரம் என்பன தவறி விட்டன. கண்டெடுத்தவர்கள் 880, K.K.S ரோட், யாழ்ப்பாணம என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும் சன் மானம் வழங்கப்படும். (80078)

---

# விற்பனைக்கு

புறொயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்கு உண்டு. தேவையானவர்கள் உடன் தொடர்பு கொண்டு விலை விவரத்தை 03-11-2000ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கவும்.

*பொது முகாமையாளர்,*
யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய்.

(C/13643)

---

# யங் ரோயல்ஸ் சயன்ஸ் அக்கடமி

**நெல்லியடி M.M.V வீதி**

## A/L 2001, 2002

பொதுவினா - **திரு. தவசேகர்**
பொது ஆங்கிலம் - **திரு. குணரட்ணம்**

(ஒரு பாடக் கட்டணத்துடன் இருபாடங்கள்)

**ஆரம்பம் 05-11-2K ஞாயிறு 11 மணி**

A/L DAY CLASS **கலை, வர்த்தகம், விஞ்ஞானம் ஆரம்பமாகி விட்டது.**

(80074)

---

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 06 | 02 |
| 05 | 10 |
| 1925 | 2000 |

## திருமதி நாகமுத்து மீனாட்சி

எங்கள் அன்புத் தாயாரான அமரர் நாகமுத்து மீனாட்சி அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு பலவழிகளிலும் உதவிய வர்களுக்கும் இறுதிக் கிரியையில் கலந்து கொண்டவர்க ளுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள் கின்றோம்.

இன்று (01-11-2000) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள்,**
**சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

*கோட்டைக்காடு,*
*மல்லாகம்.*

(79940)

---

## ஆசிரியருக்குக் கருத்தரங்கு

தென்மராட்சி கல்வி வலய பாடசா லைகளில் தரம்7, தரம்9 ஆகிய வகுப்புகளில் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கான வாழ்க்கை தேர்ச்சிப் பாடக் கருத்தரங்குகள் வலய அலு வலகத்தினால் நடத்தப்படவுள்ளன.

எதிர்வரும் 4ஆம் திகதி நெல்லி யடி மத்திய மகா வித்தியாலயத்தி லும் 5ஆம் திகதி மருதனார்மடம இராமநாதன் கல்லூரியிலும் -

கருத்தரங்குகள் நடத்தப்படு மெனவும் -

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் தவ றாது கலந்துகொள்ளுமாறும வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (ஐ-117)

## மே மாத ஓய்வூதியக் கொடுப்பனவு

தென்மராட்சிப் பிரதேசத்தில் ஏற் பட்ட இடப்பெயர்வினால் கடந்த மே மாத ஓய்வூதியத்தினை இதுவரை பெற்றுக் கொள்ளாத ஓய்வூதியர்க ளின் கொடுப்பனவை அந்தந்த வங்கிகள் மூலம் வழங்க நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

அண்மையில் வங்கிகள் தமது ஆவணங்களை மீட்டதை அடுத்து சாவகச்சேரி இலங்கை வங்கி, சாவ கச்சேரி கிராமிய வங்கி ஆகியவற் றில் இக்கொடுப்பனவுகள் தற்போது வழங்கப்பட்டு வருவதாகவும் -

சாவகச்சேரி மக்கள் வங்கியி னால் இக் கொடுப்பனவுக்குரிய தொகை பிரதேச செயலகத்துக்கு மீள் அளிக்கப்பட்டுள்ளதால், மக்கள் வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர் இணுவிலுள்ள பிரதேச செயலகத் துடன் தொடர்பு கொள்ளுமாறும் -

சாவகச்சேரி தேசிய சேமிப்பு வங்கியில் ஓய்வூதியம் பெறுவோர் வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொள்ளுமாறும்- பிரதேச செயலர் தெரிவித்தார். (ஐ-117)

## பனம் விதைகள் நடுகை

தென்மராட்சி,நவ.1

பனை அபிவிருத்திச் சபையினர் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரி விலுள்ள துன்னாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில மாதா தேவால யத்திற்கு அருகில் ஆயிரம் பனம் விதைகளை நடுகை செய்துள்ளனர்.

---

# தேவை

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட **அரவிந்தன் கிறீம் ஹவுஸ்** எனும் ஸ்தாபனத்துக்கு **வியாபாரிகள் தேவை.**
**விசேஷ கழிவுண்டு. தொடர்புகளுக்கு:**
**109, சிவன்கோயில் வடக்கு வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(80065)

---

# உடற்கல்வி மாணவர்களுக்கு

**உடற்கல்வி டிப்ளோமா இறுதி வருடப் பரீட்சை எடுத்த மாணவர்கள் உட்பட அனைத்து உடற்கல்வி மாண வர்களையும் இன்று (01-11-2000) 10.30மணிக்கு விரிவுரை மண்டபத்துக்கு சமுகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.**

**தலைவர்,**
**உடற்கல்வி மாணவர் மன்றம்**

(80079)

---

# திருட்டுப்பற்றிய முக்கிய அறிவித்தல்

**வல்லை வயலூர் முருகப் பெருமான் தேவஸ்தானத்தில் இருந்து பின்வரும் பொருள்கள் களவாடப்பட்டுள்ளன.**

1. **National** ரேப் றெக்கோடர் ஒன்று (RX-1550)
2. 2 புதிய யூனிட் AHUJA 60 வாட்ஸ்.
3. மைக் யூனிக் சவுண்ட்
4. 20 அங்குல மைக் வயர்
5. 70 யார் பிளக்ஷி வயர்

**ஆகிய பொருள்கள் 30.10.2000 இரவு களவாடப்பட்டன. தயவு செய்து இப் பொருள்களை விற்பனையின் பொருட்டு வாங்குபவர்கள் ஆலயப் பிரதமக் குருக்களுடனோ அல்லது வல்வை பொலீஸ் நிலையத்துடனோ தொடர்பு கொள்ளவும்.**

பிரதம குருக்கள்
**வயலூர் முருகன் தேவஸ்தானம்,**
**வல்லை.**

(80076)

---

**யூரோவில் நிறுவனத்தினதும்**
**அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினதும்**
**ஆதரவில்**
**யாழ்ப்பாண றோட்டறிக் கழகமும்**
**சுன்னாகம் றோட்டரக்ற்கழகமும்**
**இணைந்து நடத்தும்**

# மரம் நடுகை செயற்திட்டம்

"புதிய மரங்களை நடுவதன் மூலம் பேரனர்த்தங்களினால் அழிவுற்ற மரங்களின் இழப்பினை ஈடுசெய்வோம்"

மலைவேம்பு, சமண்டலை, தேக்கு
*போன்ற மரங்கள் பின்வரும் முகவரியில் வைத்து பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், வழிபாட்டுத்தலங்கள் என்பவற்றுக்கு முன்னுரிமை அடிப்படையில் இலவசமாக வழங்கப்படும்.*


**காலம்:** 05-11-2000
**இடம்:** Rtn. த.வாமதேவன்
முதலியார் வளவு,
கே.கே.எஸ். வீதி,
சுன்னாகம்.
(சுன்னாகம் தேசிய சேமிப்பு வங்கி அருகில்)

**யாழ். றோட்டறிக் கழகம்**

28-10-2000 (c/13633)

---

# திருமண அழைப்பு



அரியாலை
ஐயாத்துரை தம்பதிகளின்
புதல்வன் **சங்கர்**
(C.W.E. உத்தியோகத்தர்)

துன்னாலை கரவெட்டி
ஞானசேகரம் தம்பதிகளின்
புதல்வி **ஞானகி**
(பல்கலைக்கழக இறுதியாண்டு கலைப்பீட மாணவி)

ஆகியோருக்கு 03.11.2000 வெள்ளிக்கிழமை மு.ப. 10.10 மணிமுதல் 11.22 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் மணமகள் இல்லத்தில் திருமண் செய்ய நிச்சயிக்கப்பட்டுள்ளது. மணமகன் இடம்பெயர்ந்து கொக்குவில் மேற்கு ஞானபண்டித வித்தியசாலைக்கு முன்பாக வசித்து வருவதனாலும் அரியாலையூர் நண்பர்கள், உறவினர்கள் இடம்பெயர்ந்து வாழ்வதனாலும் அனைவரையும் நேரில் அழைக்க முடியவில்லை.

* மணமகன் தனது இல்லத்திலிருந்து காலை 8.30 (S.L.T) மணியளவில் மணமகள் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்.

*தங்கள் நல்வரவை நாடும்*

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(ஞானபண்டித வித்தியாசாலைக்கு முன்பாக)

A.M.ஐயாத்துரை (இளைப்பாறிய கிராம அலுவலர்),
M.A.ரவிசங்கர் (கொலண்ட்), M.A.உதயசங்கர் (சுவிஸ்),
M.A.விஜயசங்கர் (அமெரிக்கா)

(80075)

# நிமலராஜன் குடும்பத்தின் நலன் காக்கும் நிதி



குடாநாட்டு மக்களின் அவல வாழ்வை உலகுக்கு அம்பலப்படுத்தும் புனிதமான பத்திரிகைப் பணியில் துணிச்சலுடன் ஈடுபட்டு, மிரட்டல்களுக்கு அடிபணியாமல் கடமைக்காகத் தன் உயிர் ஈந்த சகோதரப் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜனின் இளம் குடும்பத்துக்கு குடாநாட்டின் சமூகத்தின் சார்பில் தினைத்துணையேனும் கைம்மாறு செய்யும் ஒரு முயற்சியை 'உதயன்' ஆரம்பித்திருக்கின்றான் என்ற செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

பத்திரிகைப் பணிக்காக தனது குடும்பத் தலைவனையே பறிகொடுத்த அந்த இளம் குடும்பத்துக்கு குடாநாட்டுச் சமூகம் தனது பங்களிப்புமிக்க ஒத்துழைப்பை வழங்கி வருகிறது.

★ உதவி நிதியை நேரில் 'உதயன்' பணிமனையில் பணமாகக் கையளிப்போருக்கு உடன் பற்றுச்சீட்டு வழங்கப்படுகிறது.

★ காசோலை மூலமாக அனுப்ப விரும்புவோர் மக்கள் வங்கியின் கன்னாதிட்டிக் கிளையில் இதற்கெனத் தொடங்கப்பட்டுள்ள **C/A 2358** ஆம் இலக்கக் கணக்குக்கு அனுப்பவும். வெளிமாவட்டங்களில் இருந்து நன்கொடை அனுப்புவோர் மேற்படி கணக்கு இலக்கத்துக்குத் தொலைநகல் மாற்றம் (Fax Transfer) மூலம் அனுப்பவும்.

★ மேற்படி நிதிக்குப் பணம் சேகரிப்பதற்கு வெளியார் எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என்பதனை அறியத்தருகின்றோம்.

★ நன்கொடை வழங்குவோரின் பெயர், விவரம் உதயனில் பிரசுரிக்கப்படும். பெயர் குறிப்பிட விரும்பாத அன்பர்களுக்கு உரிய முறையில் பற்றுச்சீட்டு வழங்கப்பட்டு தொகை விவரம் பெயரின்றியே வெளியிடப்படும்.

| நேற்றுவரை கிடைத்த நிதி:- | ரூபா |
|---|---|
| முன்கொண்டுவரப்பட்டது | - 195,380 |
| 1. ஓர் அன்புத் தங்கை - வல்வெட்டித்துறை - | 500 |
| 2. வ.மார்க்கண்டு - செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு - | 200 |
| 3. ஒரு வைத்திய நிபுணர் - யாழ்.போதனா வைத்தியசாலை - | 3,000 |
| 4. உத்தரவு பெற்ற நில அளவையாளர் சங்கம் - வடபகுதி - | 2,000 |
| 5. சு.மதனகுமார் - அர்ச்சிங்கம் றோட், வட்டுக்கோட்டை - | 100 |
| 6. எஸ்.திருநாவுக்கரசு - மல்லாகம் - | 200 |
| 7. ஓர் அன்பர் - தையிட்டி - | 100 |
| 8. சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப்பேரவை - | 2,500 |
| 9. ஒரு வங்கியாளர் - | 1,000 |
| 10. நீதி விரும்பி வி.ரி.கே. - | 200 |
| 11. ஓர் இந்து மதகுரு - பண்ணாகம், வழக்கம்பரை - | 500 |
| 12. அன்பு அன்னையின் நினைவாக - ஒரு குடும்பம் - | 1,000 |
| 13. இராசா வாமதேவன் - யாழ்ப்பாணம் - | 500 |
| 14. த.சிவலோகநாதன் பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு. - | 1,000 |
| 15. ஓர் அன்பர் - தெல்லிப்பூர் - | 100 |
| 16. சிவசக்தி பாலர் பாடசாலை - சிவன் வீதி, திருநெல்வேலி - | 250 |
| 17. விவசாயபீட மாணவன் - கஸ்தூரியார் வீதி - | 500 |
| 18. ஆசிரியர் கழகம் - யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை - | 2,000 |
| 19. தம்பையா பத்மநாதன் - நீர்வேலி - | 200 |
| 20. அதிபர், ஆசிரியர்கள் - யா.நாவற்குழி ம.வித்தியாலயம், உரும்பிராய் - | 1,000 |
| 21. ச.ஆ.கோபாலமூர்த்தி - சிவன்கோயில் வீதி, திருநெல்வேலி - | 200 |
| 22. செ.செல்வகுமார் - பிரப்பங்குளம் வீதி, யாழ்ப்பாணம் - | 100 |
| 23. எஸ்.சிதம்பரநாதன் - பண்ணாகம் - | 100 |
| 24. ஆ.நி.ஜெகநாதன் - கச்சேரி, நல்லூர் றோட், யாழ். - | 200 |
| 25. சி.நந்தகோபால் - கந்தரோடை, சுன்னாகம் - | 100 |
| 26. ஓர் அன்பர் - கொக்குவில் - | 1,000 |
| 27. ஓர் அன்பர் - கந்தர்மடம், யாழ்ப்பாணம் - | 100 |
| 28. ஓர் அன்பர் - அச்சுவேலி - | 100 |
| 29. ஓர் அன்பர் - தெல்லிப்பழை - | 100 |
| 30. இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் - யாழ்ப்பாணம் - | 1,001 |
| 31. ஏழாலை ஸ்ரீ முருகன் - வித்தியாலய அதிபர், ஆசிரியர்களுடன், இணைந்து இடம்பெயர்ந்த ஆசிரியர்கள் - | 1,100 |
| 32. அமரர் சு.பத்மாவதி நினைவாக - சுன்னாகம் தெற்கு - | 500 |
| 33. இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி குடும்பம் - | 1,803 |
| | 218,634 |




## ஸ்ரீ வல்லிபுரா போட்டோ

☛ 20.10.2000 வரை கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்ட படச்சுருள்கள் யாவும் பிரதியாக்கம் செய்து வந்துவிட்டன.

☛ எதிர்வரும் 04.11.2000 கொழும்புக்கு படச்சுருள்கள் அனுப்பி வைக்கப்படும்.

☛ கொழும்புக்கு VIDEO CASSETTE அனுப்புதலை மீண்டும் ஆரம்பித்துள்ளோம்.

☛ மிக நவீன முறையில் உங்கள் திருமண, பூப்புனித நீராட்டு விழா படங்களை லேமனேற்றிங் அல்பம் ஆக்கித் தரப்படும்.

புலோலி. 070 - 212720 (80088) நல்லூர். 021 - 2604

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

யா/சுதுமலை கிழக்கு ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் பாலர் பாடசாலை வளர்ச்சி நிதிக்காக நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புக்குரிய அதிர்ஷ்ட இலக்கங்கள்:-

1ம் பரிசு - 3062

2ம் பரிசு - 289

3ம் பரிசு - 279

குறிப்பு:- மேற்குறிப்பிட்ட பரிசில்களைப் பெறவுள்ள அதிர்ஷ்டசாலிகள் எதிர்வரும் 10/11/2000 அன்று புதிய நேரம் 1.30 மணிக்கு புவனேஸ்வரி அம்பாள் சனசமூக நிலையத்தில் பரிசில்களுக்குரிய ஆதாரங்களைக் காட்டி பெற்றுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

(80086) - நிர்வாகம்.


## இந்துப் பேரவையின் கந்தசஷ்டி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.1

வடபிராந்திய இந்துப் பேரவையின் கந்தசஷ்டி நிகழ்வுகள் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நல்லூர் தேரடி 63 நாயன்மார் குருபூசை மடத்தில் வடபிராந்திய இந்துப் பேரவைத் தலைவர் கலாபூசணம் பே.சந்திரசேகரம் (எம்.ஏ.) தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கோளறு பதிகம், இடர் களை பதிகம் ஓதுதல், நற்சிந்தனை, மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் எஸ்.சண்முகநாதன் நிகழ்த்தும் "கந்தசஷ்டியின் மகிமை" எனும் தலைப்பில் விசேட சொற்பொழிவு, திருமுறை ஓதுதல் ஆகியன நடைபெறும். (இ-ரி)

## எச்.என்.பி. வெற்றிக் கேடயப் போட்டி

யாழ்ப்பாணம்,நவ.1

ஹற்றன் நஷனல் வங்கி நடத்தும் மிலேனியம் ஆண்டுக்கான எச்.என்.பி. வெற்றிக்கேடயத்துக்கான கூடைப்பந்தாட்டப் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெறும்.

இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பரியோவான் கல்லூரி அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி 'சொக்ஸ்' அணியும் ஜொலி ஸ்ரார்ஸ 'பெண்கள்' அணியை எதிர்த்து வேம்படி 'கறுப்பு' அணியும் மோதும்.(இ-8)

## பேராதனை மாணவர்கள் பகிஷ்கரிப்பு

கொழும்பு,நவ.1

பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவர்கள் நேற்றுமுன்தினம் தமது விரிவுரைகளை முற்றாகப் பகிஷ்கரித்தனர்.

கலைப்பீட மாணவர்கள் சிலர் மீது பல்கலைக்கழக ஒழுங்காற்று சபையால் மேற்கொள்ளப்படவுள்ள நடவடிக்கைகளை கைவிடக் கோரி இந்தப் பகிஷ்கரிப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட பகிடிவதைக்கு எதிரானோர் சங்கத் தலைவரைத் தாக்கிய குற்றச்சாட்டின் பேரில் கடந்த மே மாதம் 31ஆம் திகதி மூன்று மாணவர்களுக்கு ஆயுள்காலத் தடையும், 8 மாணவர்களுக்கு ஐந்து வருடகாலத் தடையும் ஆறு மாணவர்களுக்கு ஒரு வருட காலத் தடையும் விதிக்கப்பட்டிருந்தது. 24 பேர் எச்சரிக்கப்பட்டனர்.

இந்தத் தடையை நீக்கக் கோரியே பகிஷ்கரிப்பு இடம்பெற்றது. (இ-8)

## சாரணிய வழிகாட்டுநர் செயலமர்வு

யாழ்ப்பாணம்,நவ.1

சாரணிய வழிகாட்டுநர்களுக்கான செயலமர்வு ஒன்று எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.30 மணி வரை பெரியபுலம் மகாவித்தியாலயத்தில் நடைபெறும்.

ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று இரண்டு தினங்கள் மேற்படி செயலமர்வு நடைபெறமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் நடைபெறவுள்ள பயிற்சியில் கலந்துகொள்ளும் சாரணர்கள் இந்தச் செயலமர்வுக்கு முக்கியமாகச் சமுகமளிக்க வேண்டும் எனவும் -

தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-7)

## கொடுப்பனவு பெற கிராம அலுவலர்கள் அலைச்சல்

வலி.வடக்கு,நவ.1

கடந்த பொதுத் தேர்தலின் போது தேர்தல் கடமைகளில் ஈடுபட்ட கிராம அலுவலர்களுக்குரிய கடிதம் சிரேஷ்ட தலைமை அலுவலர்களினால் வழங்கப்படாமையால் கொடுப்பனவைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும் உரிய படிவங்களை சிரேஷ்ட தலைமை வகிக்கும் அலுவலர்களிடம் தேர்தல் அலுவலகம் கையளிக்காமையே இந்நிலைமைக்கு காரணம் என அறிய வந்தது.

சிரேஷ்ட தலைமை வகிக்கும் அலுவலர்களை எங்கே சந்திப்பது என்று தெரியாமல் கிராம அலுவலர்கள் உரிய கடிதத்தைப் பெற அலைந்து திரிய வேண்டிய நிலைமை காணப்படுகிறது.

(ஐ-86)


## மறைந்தும் மறையாத மாணிக்கமே! திருமணநாள் நினைவும் 39 ஆவது நாள் அஞ்சலியும்

தோற்றம் 06 - 10 - 1961



மறைவு 24 - 09 - 2000

### அமரர் வீரசிங்கம் உதயகுமார்(B.Sc.)

(ஆசிரியர் - யா/புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை)

உற்றாரும் உறவுகளும் ஊராரும் வாழ்த்த
உரிமையோடு உயிர்த் துணையாய்க்
கைப் பிடித்த நாளப்பா இன்று!
கண்ணில் குறும்போடும் கனிவான பார்வையோடும்
தாரிகையாள் எந்தனுக்கு வாழ்த்துக்கள் கூறி
வாய் நிறையச் சிரிப்புடனே வாஞ்சையாய் அழைப்பீர்கள்!
வண்ணமரகதமே வாழ்த்துக்கள் கூறாமால்
வாஞ்சைக் குரியவனே ஏங்கியழ விட்டுவிட்டு
எங்கப்பா சென்றீர்கள்?
பால்மணம் மாறாத பாலகர் இருவரையும்
பரிசாகத் தந்து பரிதவிக்க விட்டு விட்டு
எண்ணங்களை அவர்கள் ஏற்றம் பெற கூறி
ஏந்திழையாள் என்னை ஏற்றிடு பொறுப்பை என
என்னவனே என்னை ஏங்கியழ ஏனப்பா விட்டீர்கள்?
மனையாள் என்னையும் மக்களையும்
மகிழ்வோடு பார்க்கவென ஓடி வரும் வழியில்
வாகன வடிவிலே வந்தானோ காலன்
வண்ணமுகம் காணாது வருந்தித் துடிக்கின்றோம்
புண்ணியனாம் பரமனடி புனிதனே அமைதி பெற
கல்யாண நாளாம் இன்று கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கை ஆக்குகின்றோம்!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
**அன்பு மனைவி,**
**ஆருயிர் செல்வங்கள்:**
**ஹேமபிஷா, சாகித்தியன்.**

374, பருத்தித்துறை வீதி,
(சந்தை அருகில்),
கல்வியங்காடு.

(80082)


# மரண அறிவித்தல்கள்

## செல்வராஜா ரிசிகேசன்

நாரந்தனை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் யாழ்ப்பாணத்தில் வசித்து தற்போது கனடாவில் வசித்து வந்தவருமாகிய செல்வராஜா ரிசிகேசன் (30.10.2000) கனடாவில் அகாலமரணமானார்.

இவர் செல்வராஜா - திலகவதி தம்பதிகளின் (நில அளவையாளர்-கனடா)கனிஷ்ட புதல்வனும் அச்சுதன் (லண்டன்), அனந்தன் (கனடா), மைதிலி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் வட்டுக்கோட்டை இராமுப்பிள்ளை(வீரசிங்கம்) - காலஞ்சென்ற திருமதி இராமுப்பிள்ளை தம்பதிகள், நாரந்தனை வடக்கு காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் தங்கம்மா தம்பதிகள் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல் :-
திருமதி சகாதேவன் கலாதேவி
(சிறியதாயார்)

தஞ்சி லேன்,
83/15 அரசடி வீதி,
யாழ்ப்பாணம்.

(80094)

## இராமு ஆறுமுகம்

சாவகச்சேரி, மருதடி மேற்கைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமு ஆறுமுகம் அவர்கள் திங்கட்கிழமை(30-10-2000) காலமானார்.

அன்னார் நாச்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற பராசக்தி, சாந்தநாயகி, சிவகுமாரன்(இ.போ.ச. - பருத்தித்துறை சாலை), சிவானந்தன்(லண்டன்), சிவதாசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயராசலிங்கம், தயாமதி சிவகுமாரன்(ஆசிரியை - யா/மட்டுவில் சந்திரமௌலீச வித்.) ஆகியோரின் அன்பு மாமனாரும் நந்தகோபன், ஜெயப்பிரதா, ஜெனனி, நிஷாயினி, சதீஸ், ரமணன், செந்தானன், செந்தூரன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (31.10.2000) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திக்கம் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தற்காலிக முகவரி:
வதிரி,
கரவெட்டி.

(C/13549)

தகவல்:-
ஆ.சிவகுமாரன்
(மகன்)

## க. கந்தையா (இளைப்பாறிய ஆசிரியர்)

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட க.கந்தையா (ஆசிரியர்) நேற்று (31.10.2000) செவ்வாய்க்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான யோகேஸ்வரன், இரத்தினம், செல்வநாயகி மற்றும் யோகேஸ்வரி, செல்வராணி (ஆசிரியை, சாவகச்சேரி இந்துக்கல்லூரி), இந்திராணி, ஜெகதீஸ்வரி (ஆசிரியை, சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம்), ஜெயகாந்தமலர் ஆகியோரின் அன்புத் தந்தையும், செ.சிவராஜா, கு.செல்வராஜா, இரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் தகனக் கிரியைகள் இன்று (01.11.2000) புதன்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் ஆலங்கட்டை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தற்போதைய முகவரி:
நா.ஆனந்தராஜா,
'சிவமஹால்'
மாலுசந்தி.

(C/13650)

தகவல்;
செ.சிவராஜா (மருமகன்)

# மேலும் 3 சடலங்கள் ஒப்படைப்பு புலிகளிடம் கையளிக்க ஏற்பாடு

மேலும் மூவரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்டைக்கப்பட்டுள் ளன.

நேற்றுமுன்தினம் இரவு 7.45மணி யளவில் ஒப்படைக்கப்பட்ட இந்த மூன்றுசடலங்களுடன் சேர்த்து 13 சடலங்கள் யாழ்.போதனா ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளன.

இந்தச் சடலங்கள் விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளிடம் கையளிக் கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின் றது. இதற்கான ஏற்பாடுகளை செஞ் சிலுவைச் சர்வதேசக் குழு அதிகாரி கள் மேற்கொண்டு வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-ரி-5)

## சந்திரசேகரன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுவில் வடக்கில் படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக் கையின்போது இடம்பெற்ற சண்டை யில் உயிரிழந்ததாகத் தெரிவித்து குற்றப் புலனாய்வுப்பிரிவினால் விசா ரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என கொழும்புச் செய்திகள் நேற்றி ரவு தெரிவித்தன.

இதற்கிடையில் ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்க விடுத்துள்ள பணிப புரையை அடுத்தே சந்திரசேகரன் கைது செய்யப்பட்டார் என அரசாங்க தகவல் திணைக்களம் அறிவித்துள் ளது. (இ-7)

## நிமலராஜன்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கங்களில் எழுதுகோலை கீழே வைத்துவிட்டு எழுந்து நின்று நிம லராஜனுக்கு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறு பத்திரிகை யாளர் சங்கம் வேண்டுகோள் விடுத் துள்ளது.

இந்தப் போராட்டதில் பத்திரிகை யாளர்கள், சமூக அமைப்புக்கள், மனித உரிமை மற்றும் பொது அமைப்புக்கள், பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள், தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இது தொடர்பாக வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம் விடுத் துள்ள செய்திக் குறிப்பில் -

நிமலராஜனுக்கு அஞ்சலி செலுத் தும் வகையில் குடாநாட்டிலுள்ள பாடசாலைகள், உயர்கல்விப் பீடங் கள், அரச, வர்த்தக, தனியார், கூட் டுறவு, ஊடகவியல் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த சகல தரப்பினரும் தத்தமது இடங்க ளில், அலுவலகங்களில் இன்று காலை 10.30 மணி தொடக்கம் 10.32 மணிவரை இரு நிமிடங்களுக்கு எழுதுகோல் எழுதுவதை இடை நிறுத்தி எழுந்து நின்று எழுத்துத் துறைக்குத் தன்னை அர்ப்பணித்த நிமலராஜனுக்கு அஞ்சலி செலுத்து மாறு கேட்டுக் கொள்கிறோம். -

என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(அ-5)

## சரசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தாக்குதல் காரணமாக படையினர் தரப்பில் 8 பேர் காயம டைந்தனர் எனவும் - விசேட ஊட கத் தகவல் நிலையம் அறிவித்துள் ளது.

இதேவேளை சரசாலை தெற்கி லுள்ள விடுதலைப் புலிகளின் பதுங்கு குழிகள் மீது படையினர் தாக்குதல் நடத்தி வருகின்றனர் எனவும் -

நாகர்கோயில், கச்சாய்ப் பகுதி களில் இடம்பெற்ற மோதல் சம்ப வங்களில் விடுதலைப் புலிகள் தரப் பில் இருவர் உயிரிழந்தனர் எனவும்- அது மேலும் தெரிவித்துள்ளது. (இ-7)

## மற்றொருவரின்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரவெட்டியைச் சேர்ந்த ஒரு வரின் சடலமே தற்பொழுது எடுத் துவரப்பட்டுள்ளது. இவரின் பெயர் விவரம் இந்த செய்தி அச்சுக்குப் போகும்வரை தெரியவரவில்லை.

இதனையடுத்து பண்டாரவளை தடுப்புமுகாமில் கொல்லப்பட்ட குடா நாட்டைச் சேர்ந்தோரின் எண்ணிக்கை மூன்றாக அதிகரித்துள்ளது.

ஏற்கனவே அளவெட்டி தம்பா லையைச் சேர்ந்த செல்வராஜா துரை ராஜா என்பவரின் சடலமும் ஏழாலை மேற்கைச் சேர்ந்த சிவஞானசுந் தரம் சிவரூபன் என்பவரின் சடலமும் இங்கு எடுத்துவரப்பட்டு உறவினர் களிடம் கையளிக்கப்பட்டது தெரிந் ததே.

தற்பொழுது கரவெட்டியைச் சேர்ந்த இந்த இளைஞனின் சடலம் தொடர்பாக யாழ்.மேலதிக அரசாங்க அதிபருடன் பலாலி படைத்தரப்பு தொடர்பு கொண்டுள்ளது.

இந்தச் சடலம் இன்று மத்தியா னம் அளவில் பலாலியில் இருந்து எடுத்துவரப்படவிருப்பதாகத் தெரி விக்கப்பட்டது. (இ)

## ஈ.பி.டி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாரும் காயமடைந்தனர்.

யாழ்நகரில் நேற்று இரவு 7.25 மணியளவில் - கஸ்தூரியார் வீதி யில் - கன்னாதிட்டிச் சந்திக்கு சமீ பமாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

வாகனம் சிவன் கோயில் முன் வீதியால் (கஸ்தூரியார் ஒழுங்கை யால்) வந்து கன்னாதிட்டிச் சந்தி யில் திரும்பிய வேளையில் இந்த கிரனேட் வீச்சுச் சம்பவம் இடம்பெற் றது. வாகனத்தின் பின் பெட்டிப் பகுதிக்குள் கிரனேட் விழுந்து வெடித்தது என்று தெரிவிக்கப்பட்டது.

அப்பொழுது வாகனத்தைச் செலுத்திச்சென்ற நாகலிங்கம் இரா ஜேந்திரன் - ராபீக் (வயது 27) என்பவரும் அவரது இரண்டரை வயது மகன் பிரியதர்ஷன் என்பவ ருமே காயமடைந்தனர். வாகனத்தின் முன் ஆசனத்தில் இருந்த மற்றொரு ஈ.பி.டி.பி. உறுப்பினரான சிறி காயம் எதுவுமின்றி தப்பினார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து அப் பகுதியில் சிறிது பதற்றம் நில வியபோதும் சிறிது நேரத்தில் வழமை நிலை ஏற்பட்டது.

சிறிது நேரத்தில் இராணுவத்தி னர் சம்பவம் நடைபெற்ற இடத்துக் குச் சென்று பார்வையிட்டுத் திரும் பினர். (இ-5)

# மாணவிகள் விடுதியில் தேடுதல்

யாழ்ப்பாணம்,நவ.1

யாழ்.பல்கலைக்கழக மாணவி கள் விடுதி நேற்றுக்காலை படையி னரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடு தல் நடத்தப்பட்டது.

திருநெல்வேலி இராமநாதன் வீதி யிலுள்ள இந்த விடுதிக்குச் சென்ற படையினர் பல்கலைக்கழக சிரேஷ்ட மாணவ பெண் ஆலோசகர் மற்றும் உதவி ஆலோசகர் முன்னிலையில் இந்த தேடுதலில் ஈடுபட்டனர்.

பெண் பொலீஸார் இந்த நடவ டிக்கையில் ஈடுபட்டனர் என்று பல் கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித் தன. (இ-5)

# இனக்கலவர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பதி உரை நிகழ்த்தினார்.

யுத்தத்தினால் சிங்கள மக்களே பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் ஜனாதிபதி தமது உரையில் குறிப் பிட்டார்.

ஜனாதிபதி சந்திரிகா குமார துங்க தமது வானொலி உரையில் கூறியதாவது:-

1983ஆம் ஆண்டு இடம்பெற்ற இனக்கலவரம் பிரபாகரனின் தமி ழினவாதத்துக்கு வெற்றியை அளித் தது.

எனவே மீண்டும் பிரபாகரனின் வெற்றிக்கு சிங்கள மக்கள் ஒரு போதும் இடமளிக்கக்கூடாது.

நாடு மிகவும் இக்கட்டான சூழ் நிலையை எதிர்நோக்கியுள்ளது. ஆகையால் இந்தச் சூழ்நிலையை இனக்கலவரத்துக்குப் பயன்படுத்த சில தீய சக்திகள் திட்டமிட்டுள்ளன.

இந்த சூழ்நிலையில் சிங்கள மக்கள் இனவாதக் குழுக்களின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்காமல் செயற்பட வேண்டும்.

### புலிகளும் காரணம்

தொடரும் இனப்பிரச்சினை கார ணமாக சிங்கள மக்களே பெரிதும் பாதிப்புக்குள்ளாகின்றனர். யுத்தம் முடிவுக்கு வருமானால் சிங்கள சமூ கத்தினரே கூடுதலான நன்மைக ளைப் பெறுவர்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளிலிருந்து பண்டாரவ ளைப் படுகொலைகளுக்கு விடுத லைப்புலிகளும், இனவாதக் குழுக் கள் சிலவுமே காரணம் என்பது தெரியவந்துள்ளது.

பிரபாகரன் மற்றும் இனவாதக் குழுக்களின் நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார்.

இதேவேளை -

தனியார் வானொலி ஒன்றுக்கு பேட்டியளித்த ஜனாதிபதி, இனவா தத்தைத் தூண்டும் வகையில் செயற் படுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் உடனடியாகக் கைது செய்யப்படுவார்கள் - என்று தெரி வித்தார். (அ-7)


விஜேயின இன்றைய ஒடியோ CD வெளியீடுகள்

- சீனு
- கடல் பூக்கள்
- ரிஷி

இன்னிசை உலாவரும் இன்ப இசைச் சோலை

விஜேய ரெக்கோடிங் சென்ரர்

539, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
பிரதான வீதி, மானிப்பாய்.
(80096)



ஹற்றன் நஷனல் வங்கியினரால் நடத்தப்படும்

மாபெரும் வருடாந்த கூடைப்பந்தாட்டப் போட்டி 2000

இடம் :- யாழ்.இந்துக் கல்லூரி ஆடுகளம்
நாள் :- இன்று (01.11.2000) புதன்கிழமை
நேரம் :-பிற்பகல் 3.30 மணி

அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

(C13647)



சஞ்சிகை வெளியீட்டு விழா பிற்போடப்பட்டுள்ளது

உயர் தொழில் நுட்ப மாணவ ஒன்றியத்தின் சஞ்சிகை வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற் போடப்பட்டுள்ளது. இவ் வெளியீட்டுக்குரிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

- செயலாளர்.



நாளை ஆரம்பம்

A/L 2001 வர்த்தகப் பிரிவு

DAY CLASS இரு இடங்களில்

யாழ்ப்பாணம் :- காலை 8.30 a.m
இனுவில் :- காலை 10.00 a.m

பொருளியற் கல்லூரி

நாவலர் வீதி, யாழ்ப்பாணம் (79902) இனுவில் (மத்திய கல்லூரி முன்பாக)



IIS இன் கணனிக்கற்கைநெறிகளுக்கான

5000 மாணவர்களுக்கு

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2001

யாழ். மாவட்டத்திலே கணனிக்கல்வியில் முன்னணி வகித்து வரும் எமது நிறுவனம் எமது மாணவர்களிடையே வளர்ந்துவரும் கணனி அறிவை மேம்படுத்தும் முகமாக கடந்த பல ஆண்டுகளாக பல ஆயிரக்கணக்கான மாணவர்களுக்கு வெறும் கண்துடைப்புக்காக அல்லாமல் மாணவர்களின் நம்பிக்கையைப்பெற்ற புலமைப்பரிசில்களை வழங்கிவருவது யாவரும் அறிந்ததே. அந்தவகையில் இவ்வாண்டும் 2001ம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் திட்டத்தினை இம் முறையும் 5000 மாணவர்களுக்கு வழங்குவதை இலக்காகக் கொண்டு போட்டிப்பரீட்சை (நுண்ணறிவு, பொதுஅறிவு) ஒன்றின் மூலம் கீழ்க்காணும் கற்கைநெறிகளுக்கு புலமைப்பரிசில்களை வழங்க தீர்மானித்துள்ளோம்.

புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்படவுள்ள பயிற்சி நெறிகள்.

- Bachelor of Information Technology (BIT) (3வருடங்கள்)
- Advanced Diploma in Applied Computer Science (1வருடம்)
- Diploma in Software Engineering (1வருடம்)
- Diploma in Computer Programming (8மாதங்கள்)
- Diploma in Personal Computer Specialist (8மாதங்கள்)
- Technician Diploma in Computer Hardware (6மாதங்கள்)
- Diploma in Microsoft Office (5மாதங்கள்)
- Diploma in Internet Technology (4மாதங்கள்)

கொழும்பு பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற 3வருட BIT (BACHELOR OF INFORMATION TECHNOLOGY) பட்டப்படிப்பை புலமைப்பரிசில் திட்டத்தின் ஊடாக நீங்கள் மேற்கொள்ளக் கூடியவாறு எமது புலமைப்பரிசில் திட்டம் வடிவமைக் கப்பட்டுள்ளது. கணனித்துறையில் முதன்முறையாக பட்டதாரியாகும் இவ்வரிய சந்தர்ப்பத்தை ஆர்வமுள்ள அனைவரும் தவறாது பயன்படுத்தவும்.

விண்ணப்பப்படிவங்களை கீழ்க்காணும் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்

- பொஸ்கோ புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- பூபாலசிங்கம் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- சிறீலங்கா புத்தகசாலை, K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
- மொரிடன் ஸ்ரோர்ஸ், நெல்லியடி.
- வடலங்கா புத்தகசாலை, பருத்தித்துறை.
- சுரேன் புத்தகசாலை, ஸ்ரேசன் வீதி, சுன்னாகம்.
- சாயிபாலன் புத்தகசாலை, மானிப்பாய்.
- மக்மிலன் புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
- மணிமேடா புத்தகசாலை, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

- 2001 A/L பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நலன் கருதி இப்புலமைப்பரிசில் திட்டத்தில் தெரிவு செய்யப்படுவோருக்கான [illegible] பயிற்சிநெறிகளின் விசேட பிரிவொன்று எமது சகல பயிற்சி நிலையங்களிலும் [illegible] ஆரம்பிக்கப்படும்.
- [illegible] பயிற்சி நெறிகள் இவை என்பது குறிப்பிடத்தக்கது.
- பாடசாலை மட்டத்தில் இருந்து விண்ணப்பிக்கும் மாணவர்கள் அனைவருக்கும் இத்திட்டத்தில் பல விசேட சலுகைகள் வழங்கப்படும்.

இப்புலமைப்பரிசில் திட்டத்தில் நீங்கள் உள்வாங்கப்பட்டால்,

2001ம் ஆண்டில் நீங்கள் விரும்பிய 3பிரிவுகளில் இணைந்து கொள்ளும் வகையில் February, May, September ஆகிய மாதங்களில் பயிற்சித் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆகையால் தயக்கமின்றி அனைவரும் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி :

Director, IIS, 100, Clock Tower Road, Jaffna.

இவ்வரிய சந்தர்ப்பத்தை தவற விடாதீர்கள்!

எம்முடன் இணைந்து நவீன கணனித்தொழில்நுட்பங்களை அறிந்து கொள்ளுங்கள்!

Institute of Informatics Studies (IIS)

(பிரித்தானிய IMIS நிறுவனத்தின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம்)

தலைமை அலுவலகம் :
IIS, 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
☎ 021-2831 E-mail : iis@sltnet.lk

கிளை நிறுவனம் :
IIS, நெல்லியடி, கரவெட்டி.


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.11.2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.